மாலை: 51 மணி: 10 அக்டோபர் 2009 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு



# அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில்



**(இராகு தோஷ பரிகார ஸ்தலம்)**


திருநாகேஸ்வரம் - 612 204.

கும்பகோணம் வட்டம் - தஞ்சாவூர் மாவட்டம்.

போன்: 0435-2463354

Web: www.thirunageswaramragutemple.org

E-mail: sriraagutemple @sancharnet.in




# இராகு பெயர்ச்சி விழா

பேரன்புமிக்க ஆன்மீக பெருமக்களே!

தமிழகத்தின் தொன்மையான திருக்கோயில்களில் ஸ்ரீ இராகு பகவான் வழிபட்டு அவர் பெயராலேயே விளங்கும் திருநாகேஸ்வரம் என்னும் திருத்தலம் ஸ்ரீஇராகு பகவானுக்கென்று உள்ள சிறப்புத்தலமாகும்.

இத்திருத்தலத்தில் மட்டுமே ஸ்ரீ இராகு பகவான் நாகவல்லி, நாககன்னி, என இரு தேவியருடன் திருமணக் கோலத்தில் நிருதி மூலையில் தனி சந்நிதி கொண்டு மங்கள இராகுவாக உலக மக்களுக்கு அருள்புரிகிறார். இத்தகைய சிறப்பு வாய்ந்த இத்திருக்கோயிலில் **நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஐப்பசி மாதம் 10-ம் நாள் [27.10.2009] செவ்வாய்க்கிழமை காலை 9.04 மணிக்கு.**

**இராகு பகவான் மகர ராசியிலிருந்து**

**தனுசு ராசிக்கு பெயர்ச்சி அடைகின்றார்.**

இதனை முன்னிட்டு சிறப்பு ஹோமங்கள், அபிசேகம், தயிர் பள்ளயம், அன்னதானம், இலட்சார்ச்சனை, வீதியுலா ஆகியவை நடைபெற உள்ளன.

**தோஷ பரிகாரம் செய்ய வேண்டிய ராசிகள்:**

## ரிஷபம், மிதுனம், கன்னி, தனுசு, கும்பம், மீனம்

**இலட்சார்ச்சனை கட்டணம் ரூ.200/-**

(இராகு பகவான் உருவம் பொறித்த 2 கிராம் வெள்ளி டாலர் இலட்சார்ச்சனை பிரசாதத்துடன் வழங்கப்படும்)

**இலட்சார்ச்சனை நடைபெறும் நாட்கள்: 21.10.2009 முதல் 23.10.2009 வரை [முதல் கட்டம்]**

**29.10.2009 முதல் 1.11.2009 வரை [இரண்டாம் கட்டம்]**

தோஷ பரிகாரம் செய்ய வேண்டிய அன்பர்கள் ரூ.200/- தொகையினை நேரிலோ, பண விடை அல்லது வரவோலை (MO. or D.D.) மூலமாகவோ திருக்கோயில் முகவரிக்கு அனுப்பி இலட்சார்ச்சனையில் பங்கு பெறலாம். நேரில் வர இயலாத அன்பர்களுக்கு இராகுப் பெயர்ச்சி விழா இலட்சார்ச்சனை விபூதி, குங்கும பிரசாதம் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.


**திருக்கோயில் முகவரி:**

**செயல் அலுவலர்**

**அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில்,**

திருநாகேஸ்வரம் - 612 204.

கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர்.


இங்ஙனம்

**எஸ்.ஜெயராமன்**

துணை ஆணையர் / அலுவலர்

**செ.இராமலிங்கம் பி.ஏ,**

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.

அறங்காவலர் குழுத் தலைவர்

**கோ.கன்னையன், எஸ்.சிவா, திருமதி. பானுமதி ஜிஆர்கே, அ.சின்னையன்**

அறங்காவலர்கள்

**மற்றும் திருக்கோயில் பணியாளர்கள்.**

# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2040 ஐப்பசி மாதம்
மாலை 51. மணி 10 அக்டோபர் 2009

*அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!*

**வணக்கம்.**

*திருமுருகன் திருவடிகளில் சரணடைந்து அவன் பேரருளைப் பெற்றுய்ய நான்கு விரதங்களும், மூன்று திருவிழாக்களும் நம் முன்னோர்களால் வழி வகுத்து கொண்டாடப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒன்று கந்தசஷ்டி. சஷ்டியில் விரதமிருந்தால் அகத்தில் உள்ள கருப்பையில் கரு உருவாகி குழந்தை பாக்கியம் கிடைக்கும் எனும் உட்பொருளமைந்ததே "சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்" எனும் தமிழ் முதுமொழி.*

*ஐப்பசித் திங்களில் வரும் இக் கந்த சஷ்டித் திருநாளில் கந்த சஷ்டி விரதமிருந்து, முருகப் பெருமானை வழிபட்டு புத்திர பாக்யம் பெறுவதோடு மற்றும் பல பெரும்பேருகளையும் பெற்று வாழ்வில் வளம் பெறுவோமாக, புராணக் கூற்றுப்படி நாராயணனால் நரகாசூரன் வதம் செய்யப்பட்ட நாளே தீபாவளித் திருநாள் என்றும், விளக்கினை ஏற்றிக் கொண்டாடி மகிழும் நாள் தீபாவளித் திருநாள் என்றும், வழிவழியாகக் கொண்டாடி மகிழும் வழக்காற்றுப்படி நம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து விட்ட தீபாவளித் திருநாளும் இந்த ஐப்பசித் திங்களில் நம்மை எதிர் கொண்டழைக்கிறது. தீமைகள் அகன்று நம் இல்லந்தோறும் இன்ப ஒளி பிரகாசிக்க அனைவருக்கும் எனது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*தீபாவளித் திருநாளினை முன்னிட்டு அருட்கடாட்சம் வழங்கும் அன்னபூரணியை முகப்போவியமாகவும் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் இராஜ அலங்காரத் தோற்றத்தினை உள் முகப்பாகவும், அருள்மிகு முருகப் பெருமானுக்கான 108 போற்றிகளுடனும் இவ்விதழ் மலர்ந்துள்ளது.*

*முருகப் பெருமான் பழம்பெரும் தமிழ்க்கடவுள் என்பதனையும், பகையை அழித்த முருகனுக்கு பகையில்லாததுபோல அவனது திருநாமத்தை எண்ணி உச்சரிப்போர்க்கும் பகை இல்லை என்பதால் முருக மந்திரமே மாபெரிய மந்திரம் என்பதை, "அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருகன்" எனும் தலைப்பில் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள் தமது கருத்தோவியத்தினை வழங்கியுள்ளார்.*

*வைணவத்தில் ஆழங்கால்பட்டு, நானிலமும் தான் வாழ நான் மறைகள் தாம் வாழ, மாநகரின் மாறன் மறை வாழ ஞானியர்கள், சென்னியடி சேர்தூப்புல் வேதாந்த தேசிகனே, இன்னுமொரு நூற்றாண்டிரும்" எனும் வகையில் புகழ்ந்துரைக்கப்பட்ட வேதாந்த தேசிகரின் சிறப்புகளை வழங்கியுள்ளார் வேலூர் டாக்டர் கவிமாமணி ம. நாராயணன் அவர்கள். மக்கட் தொண்டே மகேசன் தொண்டு என்பதற்கேற்ப அடியார்கள் தொண்டு செய்தே பேரின்ப நிலை எய்தினர் என்பதை திருத்தொண்டர் புராணத்து சிவனடியார்கள் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது என்பதை தொகுத்து வழங்கியுள்ளார் திரு. ச.முத்துச்சாமி அவர்கள்.*

*உறங்காப்புளி என்றும், தோலா வழக்கு, ஊராக்கிணறு காயா மகிழ் என்றும் புனைப் பெயர்களால் வழங்கப்படும் கண்ணபிரான் குடி கொண்டு அருள்பாலிக்கும் திருக்கண்ணங்குடி திருத்தலச்சிறப்பும், பூரண சரீரமாக நாககன்னி, நாகவல்லி ஆகிய இரு துணைவியருடன் மங்கள இராகுவாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் சிறப்புகளும், திருமணத் தடை நீக்கும் திருவேதிக்குடி திருத்தலச் சிறப்புகளும், உடற்பிணி தோஷங்கள் அனைத்தையும் விலக்கி பேரருள்புரியும் சக்திமிக்க திருத்தலமாக விளங்கும். பூவரசன்குப்பம் ஸ்ரீலெட்சுமி நரசிம்மர் திருக்கோயில் சிறப்புகளும் இவ்விதழில் ஆலய உலாக்களாக வெளிவந்துள்ளன.*

*இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆன்மிக விடிவெள்ளி திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் நினைவலைகளாக அவரின் "சாவித்திரி" எனும் தொடரும், வைணவத்தின் விடிவெள்ளி இராமனுஜரின் "உலகம் உய்ய உதித்த உடையவர்" எனும் திரு.பெ இராமநாதபிள்ளை அவர்களின் தொடர்க் கட்டுரையும் தொடர்ந்து இவ்விதழில் வெளிவந்துள்ளது.*


*சப்தவிடங்கத் தலங்கள் எனப் போற்றப்படும் திருவாரூர், திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காரவாசல், திருக்குவளை, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய திருத்தலங்களில் நடராசப் பெருமானின் திருநடனங்களின் சிறப்புகள் குறித்து சப்த விடங்கத் தலங்களும் நடனங்களும் எனும் தலைப்பில் இவ்விதழில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.*

*வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, தொடர்ந்து தங்களது நல் ஆதரவினை வழங்கிட வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.*

ப.ரா.சம்பத்

*இந்துசமய அறநிலையத்துறை*
*119. உத்தமர் காந்தி சாலை,*
*சென்னை – 600 034.*

*(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,)*
*ஆணையர்*



# குறளோவியம்

நெட்டிலிங்க மரம் என்பது தேக்கு மரம் போல் உயரமாக வளரக்கூடியது. ஆனால், அவ்வளவு உறுதியாகத் திகழக்கூடிய மரமல்ல. நெட்டிலிங்கத் தழை, கிளையும் கொப்புமாகத் தளதளவென்று வளமாக இருக்கும். விழாக் காலங்களில் வரவேற்பு வளைவுத் தூண்களில் அந்தத் தழையை அழகுக்காகக் கட்டுவது வழக்கம். இளமைப் பருவத்தில் மாணவர் அணியினைத் திரட்டி தமிழ் காக்கும் விழாவொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். நிகழ்ச்சிகளுக்கான எல்லா ஆக்கப் பணிகளிலும் நண்பர்களுடன் நானும் கலந்து கொண்டேன். விழா அறிவிப்புக்களை மக்களிடையே செய்வதிலிருந்து விழாச் சிறப்புறப் பந்தலை அலங்கரிப்பது வரையில் முன்னின்று காரியங்களைக் கவனித்தேன். அந்த வேலைகளில் ஒன்றாக நெட்டிலிங்கத் தழை வெட்டி வரும் வேலையும் அமைந்தது. நானும் நண்பர்களும், ஆற்றோரமிருந்த நெட்டிலிங்க மரங்களை நாடி இரவு நேரத்தில் சென்றோம்.

மரம் ஏறித் தழைகளை ஒடித்துப் போட ஒரு ஆளையும் கூப்பிட்டுக் கொண்டு சென்றோம். அந்த ஆள் நன்கு குடித்திருக்கின்றான். மளமளவென்று மரத்தில் ஏறித் தழைகளை ஒடித்துப் போட்டுக் கொண்டேயிருந்தான். நாங்கள் கீழே வந்து விழும் தழைகளை எல்லாம் கொப்புகளோடு சேர்த்துப் பொறுக்கி ஓர் இடத்தில் குவித்துக் கொண்டிருந்தோம். அந்த ஆள், சிறிது சிறிதாக மரத்தின் நுனி வரையிலே சென்று தழைகளை ஒடித்துத் தள்ளிக் கொண்டிருந்தான். எங்களுக்கு ஒரே மகிழ்ச்சி,

விழாப் பந்தலைச் சீரோடு அமைக்க வேண்டிய தழைகள் கிடைத்து விட்டன என்பதால் அளவு கடந்த உற்சாகம். அப்போது மரத்தின் உச்சியிலிருந்து அந்த ஆள் குரல் கொடுத்தான். நாங்கள் திடுக்கிட்டு விழிகளை மரத்தின் நுனிப் பக்கம் திருப்பினோம். அவன் சொன்னான்.

“நான் எவ்வளவு உயரத்தில் இருக்கிறேன் பார்த்தீர்களா? இப்போது இதை விட உயரத்துக்குப் போகப் போகிறேன்.”

கீழே நின்ற நாங்கள் அவன் பேச்சைக் கேட்டு அலறிவிட்டோம்.

“ஏ! ஏ! நீ மரத்தின் உச்சியில் இருக்கிறாய். அதற்கு மேல் போக இடமில்லை. தயை கூர்ந்து இறங்கிவிடு” என்று கெஞ்சினோம். அவனோ குடிவெறியில் இருக்கிறான். எங்கள்


வேண்டுகோள் அவன் காதில் விழவில்லை.

"இதோ பாருங்கள்! இதுதான் மரத்தின் நுனி! இதற்கு மேலே ஏறப் போகிறேன்!"

இப்படிச் சொல்லிக் கொண்டேயிருக்கிறான். அவன் சொன்னதைச் செய்திருப்பானேயானால் மரத்தின் உச்சிக்கு மேலே போயிருக்க மாட்டான். மண்ணின் அடித்தளத்தில் இடம் தேடிக் கொண்டிருப்பான். எப்படியோ ஒருவகையாக நாங்கள் அவனை மரத்திலிருந்து கீழே இறங்கச் செய்தோம். தழைகளைக் கட்டித் தூக்கிக் கொண்டு விழாப் பந்தலுக்கு வந்து சேர்ந்தோம்.

**"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்**
**உயிர்க்கிறுதி ஆகி விடும்."**

– என்ற குறள் எவ்வளவு பொருத்தமாக விளங்குகிறது, அந்த நிகழ்ச்சியை நினைத்திடும்போது! ஒரு மரத்தின் நுனிக் கொம்பில் ஏறியவர் அதையும் தாண்டி மேலும் ஏற முனைந்தால் அதுவே அவரின் உயிருக்கு முடிவாக அமைந்துவிடும்.



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி


மரம் – நுனிக்கொம்பு – அதனையும் கடந்து ஏற நினைத்தல் – ஆகியவற்றை வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் ஒப்பிட்டுப் பார்த்து வலிமையை அறிந்து நடந்திட வேண்டும் என்பதே அக்குறள் மொழியின் கருத்தாகும்.

**அதிகாரம்:48 வலியறிதல் பாடல்: 476.**

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.**

## இதழின் உள்ளே..


| | | |
|---|---|---|
| "அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருகன்" | தமிழாகரர் தெ.முருகசாமி | 6 |
| வைணவப் பேரொளி வேதாந்த தேசிகர் | ம.நாராயணன் எம்.ஏ.,பி.எச்.டி., | 10 |
| திருத்தொண்டர் புராணத்து சிவனடியாரின் இயல்புகள் | ச.முத்துச்சாமி எம்.ஏ.பி.எட்., | 14 |
| திருக்கண்ணங்குடி | இந்திரா ஆராவமுதன் | 18 |
| திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் | | 22 |
| சாவித்திரி | திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் | 25 |
| பூவரசன் குப்பம் அருள்மிகு இலட்சுமி நரசிம்மர் | வ.கோவிந்தன் எம்.ஏ., | 29 |
| உலகம் உய்ய உதித்த உடையவர் | பெ.ராமநாதபிள்ளை | 31 |
| சப்தவிடங்கத் தலங்களும் நடனங்களும் | | 35 |
| திருமணத் தடைநீக்கும் திருவேதிக்குடி | பனையபுரம் திரு. அதியமான் | 37 |



அஞ்சு முகம்தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்

*– நக்கீரர்*

# அருள்மிகு முருகவேள் 108 போற்றிகள்

1. ஓம் ஆறுமுகச் சிவமே போற்றி
2. ஓம் அறுகுசூடிதன் இளையாய் போற்றி
3. ஓம் அழகினுக் கழகே போற்றி
4. ஓம் அருளினுக் கருளே போற்றி
5. ஓம் அலங்கார நாயக போற்றி
6. ஓம் அநுபூதி நாதனே போற்றி
7. ஓம் அன்பின் அண்ணா போற்றி
8. ஓம் ஆறுமுக அப்பா போற்றி
9. ஓம் இமையோர் இறைவா போற்றி
10. ஓம் இமயப் புகலோய் போற்றி
11. ஓம் இருளினை நீக்குவாய் போற்றி
12. ஓம் இருசுடர் ஆனாய் போற்றி
13. ஓம் ஈசனார் குருவே போற்றி
14. ஓம் ஈரேழ் உலகோய் போற்றி
15. ஓம் உமையருட் செல்வா போற்றி
16. ஓம் உயர்மறைப் பொருளே போற்றி
17. ஓம் எஃக வேலுடையாய் போற்றி
18. ஓம் எமபயம் நீக்குவாய் போற்றி
19. ஓம் எழில் அற்புதனே போற்றி
20. ஓம் ஏறுமயில் ஏறி போற்றி
21. ஓம் ஒப்பிலா இறைவா போற்றி
22. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி
23. ஓம் ஔவைக் கரசே போற்றி
24. ஓம் கங்கையின் மைந்தா போற்றி
25. ஓம் கடம்பா இடும்பா போற்றி
26. ஓம் கதிர்காமக் கந்தா போற்றி
27. ஓம் கந்தா முருகா போற்றி
28. ஓம் கவிமாலை அணிந்தாய் போற்றி
29. ஓம் கார்த்திகேயனே போற்றி
30. ஓம் காவற் காரனே போற்றி
31. ஓம் காவடி விருப்பனே போற்றி
32. ஓம் குகனென நின்றாய் போற்றி
33. ஓம் குமரகிரி வாசனே போற்றி
34. ஓம் கும்பமுனிக் குருவே போற்றி
35. ஓம் குராவடி வேலனே போற்றி
36. ஓம் குறத்திக் கோவே போற்றி
37. ஓம் குறிஞ்சிக் கிழவா போற்றி
38. ஓம் குன்றம் எறிந்தோய் போற்றி
39. ஓம் குன்றுதோ றாடுவாய் போற்றி
40. ஓம் கூத்தன் மைந்தா போற்றி
41. ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி
42. ஓம் கொற்றவை குமரா போற்றி
43. ஓம் கொற்றதல்ி வேலோய் போற்றி
44. ஓம் கோலமயில் குமரா போற்றி
45. ஓம் கோரும்வரம் தருவாய் போற்றி
46. ஓம் சங்கப் புலவா போற்றி
47. ஓம் சரவண பவனே போற்றி
48. ஓம் சகல நலம் அருள்வாய் போற்றி
49. ஓம் சண்முகக் குமரா போற்றி
50. ஓம் சிவகுரு நாதா போற்றி
51. ஓம் சிவசுப்பிர மணியா போற்றி
52. ஓம் சீரலைவாய்த் தேவே போற்றி
53. ஓம் சூர் முதல் தடிந்தாய் போற்றி
54. ஓம் செஞ்சுடர் வேலா போற்றி
55. ஓம் செவ்வேள் பரமா போற்றி
56. ஓம் செந்தில் வாழ்வே போற்றி
57. ஓம் செந்தமிழ்ச் செல்வா போற்றி
58. ஓம் செங்கோட்டு வெற்பா போற்றி
59. ஓம் சேவற் கொடியோய் போற்றி
60. ஓம் சேந்தா முருகா போற்றி
61. ஓம் சைவக் கொழுந்தே போற்றி
62. ஓம் ஞானச் சுடரே போற்றி
63. ஓம் ஞானப் பழமே போற்றி
64. ஓம் தங்க வேலனே போற்றி
65. ஓம் தண்டாயுதபாணியே போற்றி
66. ஓம் தமிழ்மா மறையே போற்றி
67. ஓம் தமிழெனும் அழகே போற்றி
68. ஓம் திகழ்மணி மார்பா போற்றி
69. ஓம் திகழ்மயில் வாகனா போற்றி
70. ஓம் திருச்செந் தூரா போற்றி
71. ஓம் திருப்பரங் குன்றா போற்றி
72. ஓம் திருஆவி னன்குடியாய் போற்றி
73. ஓம் திருவே ரகக்குருவே போற்றி
74. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி
75. ஓம் திருப்புகழ் விருப்பா போற்றி
76. ஓம் திருமால் மருகா போற்றி
77. ஓம் திருவருட் செல்வா போற்றி
78. ஓம் தீமையைத் தீர்ப்பாய் போற்றி
79. ஓம் துங்கக் கொடையோய் போற்றி
80. ஓம் தூ மறைக்கு ஆதி போற்றி
81. ஓம் தெய்வானை கணவா போற்றி
82. ஓம் தேவர்தம் கோவே போற்றி
83. ஓம் நக்கீர நாயகா போற்றி
84. ஓம் நற்றமிழ் வேந்தே போற்றி
85. ஓம் பழநிமலை வாழ்வே போற்றி
86. ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி
87. ஓம் பன்னிரு தோளாய் போற்றி
88.ஓம் பதினெண்கண் மலர்ந்தாய் போற்றி
89. ஓம் பிணிமுகம் ஏறுவாய் போற்றி
90. ஓம் பிணிக்குலம் ஓட்டுவாய் போற்றி
91. ஓம் பிரணவம் மொழிந்தாய் போற்றி
92. ஓம் பிரமனைக் குட்டினாய் போற்றி
93. ஓம் பிறவா நெறி அருள்வாய் போற்றி
94. ஓம் மலைமகள் மகனே போற்றி
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி
96. ஓம் மாயோன் மருகா போற்றி
97. ஓம் முத்தமிழ் முருகா போற்றி
98. ஓம் முத்தைய வேளே போற்றி
99. ஓம் முருகெனும் அழகே போற்றி
100. ஓம் முருகாற்றுப் படையோய் போற்றி
101. ஓம் மூவர்க்கும் முதல்வா போற்றி
102. ஓம் வள்ளி நாயகனே போற்றி
103. ஓம் வழித்துணைக் குழகா போற்றி
104. ஓம் விழித்துணை அழகா போற்றி
105. ஓம் வெற்றிவேல் முருகா போற்றி
106. ஓம் வேடர்தம் மருகா போற்றி
107. ஓம் வையச் சுடரே போற்றி
108. ஓம் வைர வேல் வீரா போற்றி போற்றி.

# "அரும் பெறல் மரபின்

முருகப் பெருமான் பழம் பெரும் தமிழ்க்கடவுள். அவனைத் தமிழர்கள் வழி வழியாகக் கொண்டாடி வந்தனர் என்பதற்கு அகச்சான்றாக உள்ளது திருமுருகாற்றுப் படையின் ஒரு தொடராகும். அதுதான் "அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருகன்" (269) என்பது. இதில் உள்ள மரபின் என்ற சொல் வழி வழியான பழமையைச் சுட்டுவது, இப்பழமை இன்னது எனச் சுட்டியறிய முடியாத தொன்மையுடையது. ஆக, பழங்காலந் தொட்டு முருகனைக் கொண்டாடுவோர் முருகா, முருகா எனக் கூறி அருச்சித்து வந்த குறிப்பை இத்திருமுருகாற்றுப் படை வரி பதிவு செய்துள்ளது எனத் தெரிகிறது.

முருகாற்றுப்படை என்றதோர் இலக்கியப் பெயரும் முருகனின் கடமையை சுட்டவல்ல சரியான சான்றாகும். ஏனெனில், ஆற்றுப்படை என்பது சங்க இலக்கியச் சொல்லாதலால் அச்சொல்லோடு அமைந்த பத்துப் பாட்டின் சில ஆற்றுப் படைகளுடன் முருகாற்றுப் படையும் ஒன்றாகச் சேர்ந்துள்ளதால் முருகன் என்ற பெயரின் பழமை நன்கு விளங்குகிறது. மேலும் முருகனுக்குள்ள பல பெயர்களின் அடிப்படையில் வேறு வேறு இலக்கியங்கள் கிளைத்தன போலப் பழமையான ஆற்றுப்படை நூல் ஒன்று அமையாததால் திருமுருகாற்றுப் படையின் பழமையோடு முருகனின் பழமையும் அறியலாகிறது.





முருகனுக்கமைந்த கந்தன், கடம்பன், கார்த்திகேயன், குகன், ஆறுமுகன் போன்ற பெயர்கள் காரணத்தோடமைந்த பெயர்களாகும். இக்காரணம் செயற்கையாலானது. ஆனால், முருகன் என்ற பெயர் இயற்கைக் காரணத்தாலான செம்பொருட்சொல்.

கந்து என்றால் பற்றுக்கோடு. பக்திப் பற்றோடுகூடிய அன்பர்களைப் பற்றிக் கொள்வதால் முருகன் கந்தன் எனப்பட்டான். கடம்பு – மலை நிலத்தில் விளையும் ஒரு வகை மரம். அதன் மலரை முருகனுக்கு அணிந்து வழிபட்டதால் அவன் கடம்பனானான். புராண மரபுப்படிக் கார்த்திகைப் பெண்டிர் அறுவர் வளர்த்ததால் கார்த்திகேயன், அன்பர்களின் மனக்குகையில் தங்குவதால் குகன். ஆறுமுகம் உள்ளதால் ஆறுமுகன் என்றெல்லாம் பொருத்தமான காரணத்துடன் கூடிய பெயர்கள் முருகனுக்கு அமைந்தன.

இவை போலவே திருமுருகாற்றுப் படைக்குள்ளேயே முருகனுக்கு ஆறெழுத்துப் பெயர் ஒன்றிருந்ததாக நக்கீரர் கூறுகிறார். "ஆறெழுத் தடக்கிய அருமறை கேள்வி" (184) என்ற தொடருக்கு உரை கூறியோர் பொதுவாக ஆறெழுத்து மந்திரச் சொல்லான பெயர் என்றனர். இப்பெயரை 'நமக்குமாராய' என ஒற்றெழுத்து நீக்கி அறியும் பெயராக நச்சினார்க்கினியர் கூறினார்.

பின்னாளில் 'சரவணபவ' என்பதாகும் என்றனர். இவை வடபுலக் கலப்பால் வந்த பெயர்கள். இப்படியாகத் தமிழிலோ

# பெரும் பெயர் முருகன்"

வடமொழியிலோ காரணம் பற்றி அமைந்ததற்கு மேலான வகையில் பண்பு அடிப்படையில் இயல்பாய் இயற்கையாய் அமைந்த 'முருகன்' என்ற பெயர் தான் மிகவும் சிறப்புக்குரிய பொருத்தமான பெயர் என்பதால் நக்கீரர் 'அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருகன்' என்றார்.

பெரும் என்றது பெரிய என்ற பொருளைத் தரும். பெரிய யாழுடைய பாணன் பெரும்பாணன் எனப்பட்டான். சிறிய யாழுடைய பாணன் சிறுபாணன் ஆவான். பாணற்கள் வைத்திருந்த யாழ்க் கருவியின் அளவு கருதி பெயர் அமைந்ததைப் போல முருகன் என்ற சொல்லுக்குள் அமைந்த பல்வேறு இயற்கைப் பொருள்களின் அளவால் அவன் பெரியவன் ஆவான். அதனால் அவன் பெயர், பெரிய பெயர் எனப்பட்டது.

பெரும் என்பதற்குப் பெருமை என்ற பொருளும் உண்டு. அது அவனுக்குரிய பெருமையை மட்டுமே சுட்டும். ஆனால் "பெரிய" என்றது அப்பெயரால் அவன் பெரியவன் என்பதைப் போல அப்பெயர் உச்சரிப்போரைப் பெரியராக்கும் வல்லமையும் கொண்டதால் முருகன் என்ற பெயர் பெரிய பெயராகக் கருதப்பட்டது. அதைத்தான் பெருமந்திரம் என்பதாகப் பகர்ந்தனர் மக்கள். மந்திரம் என்றதை நன்மை பயக்க வல்லதாகக் கருதியதால், ''வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தன் எனச் சொல்லக் கலங்குமே," எனத் தண்டபாணி சுவாமிகள் சொன்னது போல் முருகன் என உச்சரிக்க உச்சரிக்க நற்பயன்கிட்டியதை அனுபவித்ததால் பழந்தமிழர் முருகனது பெயரைப் பெரிதாகக் கருதினர் எனத் தெளிவாகிறது.

இப்படியாக முருகன் என்ற சொற்பொருள் அனுபவத்தில் ஊறித் திளைத்த தமிழர்கள் மேலும் அந்தச் சொல்லுக்குள் உலகிலேயே அடங்கிக் கிடப்பதாகக் கண்டனர். உலகியலில் வன்மை, மென்மை இவ்விரண்டிற்கும் நடுவான இடைமைப் பண்புகள் கலந்த வாழ்வியலைக் காணலாம். போர்க் குண வல்லான்மை மட்டுமே உலகமன்று. அதைத் தணிக்க வல்ல சமாதானமும் உண்டு. அந்தச் சமாதானத்தின் அடிநிலைப் பண்பான





இரக்கம், கருணை, அன்பு போன்றவை களே உலக வாழ்வை நிலை நிறுத்தவல்ல மென்மைக் குணங்களாகும், இப்படி வன்மை, இடைமை, மென்மை என்ற முக்கூறுகளின்றி உலக இயக்கம் இல்லை என உணர்ந்ததன் காரணமாகக் கண்டறியப்பட்ட உண்மையை மொழி யில் வல்லின, இடையின, மெல்லின உச்சரிப்பின் மூலமாக உணர்ந்ததால் இம்முக்கூட்டுப் பண்பமைந்த சொல் லாக முருகன் என்ற பெயரைத் தமிழர்கள் தமக்கு மேலான கடவு ளுக்கு இட்டு அழைத்தனர் எனலாம்.

இதனால்தான் பகைவனுக்கும் அருளவல்ல மன அழகுடைய முரு கனைக் குமரகுருபரர் ''கருணை வெள்ளம்'' என்றார். "சடாயுபுரியில் கருணை வெள்ளமென வீற்றிருக்கும்... குமரனை'' என முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழின் செங்கீரைப் பருவப் பாடலில் (5) குருபரர் கூறியுள்ளார். போர்க்களத்தில் மெய்ஞ்ஞானத்தைக் காட்டிய கருணையால் அவனுக்குப் பகை இல்லாததுபோல அவனை வழிபடும் அன்பர்க்கும் பகைகிடை யாதாம், அதனால் அவனை "ஞான வெள்ளக்கடலமுது'' என்கிறார் தண்டபாணி சுவாமிகள்.

**திண்ணியநெஞ் சுறுசூரன்**
**திறலொழியப் பொருதாயென்று**
**எண்ணியபே றுடையாரும்**
**இகலோரால் தளர்வாரோ?**
**நண்ணியவா றருள்புரியும்**
**ஞானவெள்ளக் கடலமுதே!**
**புண்ணியத்தோர் பலர்வாழும்**
**புருடேச நகர்க்குகனே!**

இப்பாடல் அப்பர் கரையேறிய ஊருக்குப் பக்கத்தில் உள்ள புருடேசநகர் என்னும் கிராமத்துக்கோயில் முருகன்மீது பாடிய பதிகத்தில் உள்ள ஒன்றாகும். எனவே பகையை அழித்த முருகனுக்குப் பகையில்லாததுபோல அவனது திருநாமத்தை எண்ணி உச்சரிப்போர்க்கும் பகை இல்லை எனக் கூறுவதால் முருக மந்திரமே மாபெரியமந்திரம் எனலாம்.

முருகு என்ற அடிப்படையில் அமைந்த சொல்லே முருகன் என்பது. இது, மொழிப் பாகுபாட்டில் மெல்லின, இடையின, வல்லின ஒலி வடிவாலும், வரிவடிவாலும் அமைந்த சொல். இம்முருகு என்ற சொல்லுக்குப் பொருள் கண்ட திரு.வி.க., அழகு, மணம், இளமை, கடவுள் தன்மை என்பதாக விரித்துரைத்தார்.

அழகு என்பது அழியாத் தன்மையான இயற்கையானது. கையால் புனையப்படுவது செயற்கை. அங்ஙனமின்றி வசீகரிக்கக்கூடிய வனப்பு. இதைத்தான் 'கைபுனைந் தியற்றாக் கவின் பெறு வனப்பு (17) என நக்கீரர் கூறுகிறார். அலங்கரிக்கப்படும் எந்த அழகும் புற அழகே. அது நிரந்தரமன்று. ஆனால், நெஞ்சத்தால் உணரப்படும், உணர்த்தப்படும் மனித நேயப் பண்பே நிலையான அழகு. இந்த அழகுடையவன் முருகன். ஆயிரங்கோடி காமர் அழகெலாம் ஒன்றாய்த் திரண்ட புற அழகை உடைய முருகன்; அந்த ஒன்றாலேயே அவனை முழுமையாக அடையாளம் காட்ட முடியாதென்கிறார் கந்த புராணம் பாடிய கச்சியப்பர்.

போர்க்களத்தில் சூரபதுமன் முன்பாக முருகன் காட்சி நல்குகிறான். முருகனது புறக்கோலத் தோற்றம் கண்டதும் மின்னலாக மாய்கிறது. ஆனால், முருகன் காட்டிய அக அழகு மாட்சியில் திளைக்கிறான் சூரபதுமன். இவ்வுண்மையைக் கச்சியப்பர்;

**"இறுதியும் முதலும் இல்லா இப்பெரு**
**வடிவந் தன்னைக்**
**கறைவிடம் உறழும் சூரன் கண்டுவிம்**
**மிதத்தின் நிற்ப**
**அறிவரும் உணர்தல் தேற்றா ஆறுமா**
**முகத்து வள்ளல்**
**சிறிதுநல் லுணர்ச்சி நல்க இணையன**
**செப்ப லுற்றான்"**

என்ற பாடலில் பதிவு செய்துள்ளார். இதில் கூறும், "சிறிது நல்உணர்ச்சி நல்க" என்றது தான் முருகன் காட்டிய மன அழகு. இந்த அழகில் திளைத்த சூரனுக்கு அகந்தை போனது; ஞானம் பிறந்தது என அவனே, "போயின அகந்தை, போதம் புகுந்தன" எனக் கூறுவதாகக் கச்சியப்பர் கூறுகிறார். மேலும் முருகனது மன அழகை அனுபவிக்கும்போது

தன்னைப் புரிந்து கொண்ட ஏகாந்தத்தில் கூத்தாடுகின்றான்.

"திருகிய வெகுளி முற்றும் தீர்ந்தன செருவின் ஊக்கம்
அருகிய துரோமம் புள்ளி ஆயின விழியில் தூநீர்
பெருகிய திவன்பால் அன்பு பிறந்தன தமியேற் குள்ளம்
உருகிய தென்பு தானும் உலைமெழுகாகும் அன்றே."



அனலில் மெழுகு உருகுவது போல முருகனது ஞான அழகில் ஆணவம் அடக்கப்பட்டு விட்டதாக சூரன் உணர்கிறான்.

திருவாரூரில் சுந்தரரைக் காணும் பரவையார் 'முன்னே வந்து எதிர்தோன்றும் முருகனோ' என வியந்து கூறும் கூற்றில் முருகனது புற அழகு தொனித்தாலும் "முருகு ஒத்தீயே முன்னியது முடித்தலின்" என்ற புறநானூற்றுத் தொடர் (54) நினைத்ததை முடிக்கவல்ல முருகனின் அகஉணர்வின் அழகை ஓர்ந்தறியும்போது தான் முருகனின் மண வழகினும் அவனது மனவழகே அழகு என்பதை உளமார உணர முடிகிறது. இந்த அடிப்படையில் தான் அவன் சூரபதுமனுக்கருளிய கருணை உணரப்படுவதால் அவன் அழியா அழகன் என்ற பொருளில் அவனை முருகன் என்று பெயரிட்டழைத்தனர் நம் முன்னோர் எனலாம்.



தேன் பிலிற்றும் மலரின் மகரந்தந்தான் முருகிற்கான இடம். அங்கிருந்து தான் மணம் பரவுகிறது. இம் மகரந்தம், தன் மகரந்தச் சேர்கை அயல் மகரந்தச் சேர்க்கை என்ற இரு வேறு வகையில் அடுத்தடுத்துச் செடி, கொடிகளை உருவாக்குகின்றது. மகரந்த மணத்தால் அடுத்ததோர் உயிர்ப்பு உருவாவதைப் பெறுவர் என்பதால் முருகனை அல்லது முருகு என்பதை மணம் என்ற குறியீட்டால் உணர்த்தினர் நம் முன்னோர். வேடர் குலத் தலைவனாகிய நாகன் முருகனை வேண்டியே திண்ணனாம் கண்ணப்பரைப் பெற்றதாகப் பெரிய புராணம் சான்று பகர்கின்றது. எனவே, மணம் ஒரு போதும் இருந்த இடத்தில் இராதென்பதால் அது சென்று பரவும் தன்மைபோல முருகனது வழிபாடு தலைமுறை உரு வாக்கத்தால் விரியும் இல்லற மாண்பிற்கானது என்பதும் அவ்வழிபாட்டிற்கான மந்திரச் சொல் தான் பெரும் பெயர் முருகன் என்பதும் தெள்ளத் தெளிவான உண்மையாகும்.



முருகனுக்கான இளமை என்றது என்றும் மாறா இளமை. பிறை வளர்ந்து முழு நிலாவானாலும் அம்முழு நிலாவில் பளிச்செனக் காணும் களங்கத்தால் நிலாவுக்கு நீங்காக் குறை யுள்ளது போல் நிலவின் இளம் பிறைக்கு இல்லாததால் இளமைக்கான தெய்வீகம் ஏற்றமுடையதாகும். அதனால் தான் உடலுக்கு முதுமை உண்டே தவிர உள்ளத்திற்கு முதுமை இல்லை. அது என்றும் இளமையானது என்பர். அந்த மாறா இளமையே முருகனின் வளமை.

ஆக, என்றும் மாறா இளமையும், அழகும், மணமும் கலந்த கூட்டுறவே காண்டற்கரிய தெய்வீகம் என்பதால் அத் தெய் வீகத்தை உணர முருகனும் முருகனது பெயரும் பெற வரும் பொருளும் பெயருமாம் எனலாம்.


தமிழாகரர் **தெ.முருகசாமி,** புதுச்சேரி–9.

# வைணவப் பேரொளி வேதாந்த தேசிகர்

திருமாலை முதன்மைக் கடவுளாக ஏற்றுப் போற்றி காலங்கள் தோறும் வழிபட்டு வருபவர்கள் வைணவர்கள்.

எந்தவொரு மதமும், சமயமும், இயக்கமும் அமைப்புகளும் நன்கு வளர்ந்து செழித்து வரும் வேளைகளில், பின்பற்றுவோர் களிடையே கருத்து வேறுபாடுகள் அரும்பும்; மலர்ந்து மணம் பரப்பி அவற்றை இரண்டாகப் பிரித்துவிடும்; பிளந்து விடும் என்பதை நாம் வரலாற்றுக் காலங்கள் தொட்டுக் கேட்டும், கண்டும் வருகின்றோம். அந்த வகையில் வைணவமும் வடகலை – தென்கலை என இரு பிரிவுகளாகப் பிரிந்தது. வடகலைப் பிரிவிற்கு வேராகவும், நீராகவும், விளங்கியவர்; தந்தையும், தலைவருமாகத் திகழ்ந்தவர் வைணவப் பேரொளி வேதாந்த தேசிகர் ஆவார். வைணவ நூல்களிலும், கோட்பாடுகளிலும் மிகவும் ஆழங்கால் பட்டவர் இவர். வைணவ சமயத்தின் அறிவார்ந்த சிகரங்களுள் ஒருவராகவே இவர் திகழ்ந்திருக்கின்றார். இவரைப் பற்றி இங்கு ஆராய்வோம்.

கலைகளுக்கெல்லாம் தலைநகரமாக விளங்கியதும், விளங்கி வருவதும் காஞ்சிபுரம் ஆகும். வைணவ சமய வாழ்விலும், வளர்ச்சியிலும் காஞ்சிபுரத்திற்கு மிகப் பெரும் பங்கு உண்டு. இங்கு 'தூப்புல்' எனுமிடத்தில் கி.பி.1268 செப்டம்பர் திங்கள், விபவ



ஆண்டு புரட்டாசித் திங்கள் திருவோண நன்னாளில் வேதாந்த தேசிகர் பிறந்தார்.

இவரது தந்தை அனந்தசூரி; தாயார் தோதாத்திரி அம்மையார். திருவேங்கட முடையான் திருவருளால் பிறந்த குழந்தை என்பதால் 'வேங்கடநாதன்' என்று இவருக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர்.

இராமானுசர் உருவாக்கிய 74 சிம்மாசனா திபதிகளில் ஒருவரின் பரம்பரையில் தோன்றியவர் வேதாந்த தேசிகர். இவருக்குக் கல்வி உட்பட எல்லாத் திறமைகளும் பிறவியி லேயே சிறப்பாக வாய்க்கப் பெற்றிருந்தன. முறைப்படி தென்மொழி – வடமொழி சாத்திரங்களை கற்றுத் தேர்ந்தார். உரிய பருவத்தில் திருமங்கை என்ற பெண்ணை மணந்தார். இருபது வயதிற்குள் அனைத்துச் சாத்திரங்களிலும் வல்லவரானார்.

இவருடைய புகழும், வாதத் திறமையும் எங்கும் பரவின. அயக்கிரீவ தோத்திரம், தேவநாயக தோத்திரம், அச்சுத தோத்திரம் போன்ற வடமொழி நூல்களையும், மும்மணிக் கோவை போன்ற தமிழ் நூல்களையும் பாடினார்.

சாதனையாளர்களைக் கண்டு சுற்றியுள்ள கூட்டம் எப்பொழுதும் பொறாமையால், புழுங்கும் தானே! சகலகலா வல்லவராக இவர் விளங்கியதைக் கண்டு பொறாமை கொண்ட சிலர், இவரிடம் 'கட்டிடக் கலைத் திறம் இல்லை' என மெய்ப்பிக்கக் கருதி, ஒரு கொத்தனை ஏவிக் கட்டிடக் கலையில் போட்டியிடுமாறு செய்தனர். அவ்வாறு கிணறு கட்டுவதாக ஏற்பாடு செய்து கட்டிய பொழுது, இவர் கட்டும் திறமையைக் கண்டு கொத்தன் இவர் காலில் விழுந்து வணங்கிப் பிழை பொறுக்குமாறு வேண்டினான்.

பின்னர் திருக்கோவலூரிலும், காஞ்சியி லும் வடமொழித் தோத்திர நூல்கள் பாடினார். குளிர்க் காய்ச்சலால் வருந்தியவர் களைக் காக்க வேண்டி 'சுதர்சன அட்டகம்' பாடினார். பிறகு இன்றைய 'சோளிங்கர்' எனப் பெறும் 'சோழசிங்கபுரம்' வருகை தந்து வணங்கிப் பாடித் திருப்பதி – திருமலை அடைந்து திருவேங்கடவனை வணங்கித் 'தயா சதகம்' பாடினார்.

பின்னர் இவர் காசிக்கு யாத்திரை செல்லும்போது வழியில் துங்கபத்திரை நதிக் கரையில் தமது ஒரு சாலை மாணாக்கர் மாதவர் எனும் வித்தியாரண்யரைக் காண்கின்றார். அப்பொழுது வித்தியாரண்யர் துறவறம் பூண்டிருந்தார். அவ்வேளையில் அரசன் புக்கராயனின் மகளைப் பிடித்திருக்கும் பேயை ஓட்டிப் பெரும் பரிசினைப் பெறுகிறார் மாதவர். மேலும் மாதவர் விசய நகர அரசிற்கு அமைச்சர் எனும் நிலைக்கு உயர்கிறார்.

தேசிகருக்கு எந்த நாளிலும் பொருளில் நாட்டம் இருந்ததில்லை. இவரது ஏழ்மையைப் போக்கக் கருதிய மாதவர் தம் அரசரிடம் வந்து பொருள் பெறுமாறு மடல் விடுக்கிறார். ஆனால், இவருக்கு மறுமொழியாக வேதாந்த தேசிகர் 'வைராக்கிய பஞ்சகம்' எனும் ஐந்து சுலோகங்களை எழுதி விடுத்தார்.

அவ்வேளையில் திருவரங்கத்தில் வடநாட்டுப் புலவனொருவன் வைணவர் களை வாதம் செய்து அடக்கி வருவதாகவும், இவர் உடனே வர வேண்டும்' என்றும் அழைப்பு வருகிறது.

வேதாந்த தேசிகரும் செல்கின்றார். ஆணவம் பிடித்த வடநாட்டுப் புலவன் தேசிகரின் சிறிய உருவத்தைப் பார்த்தவுடன், பரிகசித்து, 'ஐயா உமது கீர்த்தி பெரியதா கவும், ஆகாரம் குறுகியதாகவும் உள்ளதே?' என்றான்.

வடமொழியில் ஆகாயம் என்பதற்கு உருவம், உடல் என்று பொருள் உண்டு. ஆனால், நமது தேசிகரோ, 'ஆகாரம்' என்ப தைத் தமிழ் நெடுங்கணக்காகக் கொண்டு 'ஆகாரம்' என்பதே நெடில் அல்லவா? நீர் குறில் என்கிறீரே! என்று அவரை மடக்கி விட்டார்.

வாதம் தொடர்ந்தது; வடநாட்டுப் புலவன் தோற்றுவிட்டான். வேதாந்த தேசிகரின் அந்த வாதமே 'சத தூஷணி' என்று நூல் வடிவம் பெற்றது.

தோற்ற பிறகும் கூட, வடநாட்டுப் புலவனின் செருக்கு அடங்கவில்லை. வேதாந்த தேசிகரிடம் 'இங்கு உமக்கு முதல் மரியாதை நடக்கட்டும்; அடுத்தது நானே பெரியவன்; எனக்கு இரண்டாவது மரியாதை வேண்டும்' என்று அடம் பிடித்தான். ஆனால், மற்றவர்களுக்கு இது விருப்பமில்லை. இதனை உணர்ந்த தேசிகர் ஒரு தந்திரம் செய்தார்.

அடக்கமும், பணிவும் மிக்க தேசிகர், தம்மை அனைவருக்கும் அடியவராகப் பாவித்து, ஆலயத்திலிருந்த அனைவருக்கும் பிரசாத மரியாதைகளை வழங்கச் செய்து, பிறகு மரியாதைகளைத் தாம் பெற்றுத் தமக்குப் பிறகு அப்புலவன் விரும்பியவாறு அவருக்கு மரியாதை வழங்கச் செய்தார். இதனைக் கண்டதும் புலவர் வெட்கித் தலைகுனிந்தான்.

பிறகு திருவரங்கத்தில் பாஷ்ய விரிவுரை நிகழ்த்தி உபய வேதாந்தாசாரியார், சர்வ தந்திர சுந்தரர் எனும் விருதுகளைப் பெற்றார். வேதாந்த நெறிக்கு இவரே சிறந்த ஆசாரியராய் விளங்கியமையால் அன்று முதல் இவர் வேதாந்த தேசிகர் என்று அழைக்கப் பெற்றார். திருவரங்கத்தில் இவர் சமய தோத்திர நூல்கள் பல பாடினார். திருவரங்கத்தைப் போற்றும் இவரது பாடல்களுள் ஒன்று.

"ஆராத அருளமுதம் பொதிந்த
கோயில்
அம்புயத்தோன் அயோத்தி மன்னர்க்
களித்த கோயில்
தோராத தனிவீரன் தொழுத கோயில்
துணையான வீடணற்குத் துணையாங்
கோயில்
சேராத பயனெல்லாம் சேர்க்கும்
கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த
கோயில்
தீராத வினையெல்லாம் தீர்க்கும்
கோயில்
திருவரங்கம் எனத் திகழும் கோயில்
தானே...!"

எத்துணை எளிமை, இனிமை, தெளிவு இந்தப் பாடலில்! இதேபோன்று இவரது அதிகார சங்கிரகம் 43-ஆம் பாடலைப் பார்ப்போம்.

"கண்ணனடி யினைஎமக்குக் காட்டும்
வெற்பு
கருதுமவர் இருவினையும் கடியும்
வெற்பு
திண்ணமிது வீடென்னத் திகழும்
வெற்பு
தெளிந்த பெருந் தீர்த்தங்கள் தெரிந்த
வெற்பு
புண்ணியத்தின் புகலிதெனப் புகழும்
வெற்பு
பொன்னுலகிற் போகமெலாம்
புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும்
வெற்பு
வேங்கட வெற் பென விளங்கும் வேத
வெற்பே..."

பின்னர் இவர் தென்னாட்டுத் திருப்பதிகள் தோறும் சென்று வழிபட்டார். ஆண்டாள் திருக்கோயிலில் 'கோதா சஷ்டி' பாடினார். நாள்தோறும் உள்ள நேரத்தை ஒழுங்குபடுத்தி இவர் அமைத்திருந்த வேலைத் திட்டம் 'தினசரியை' எனப் பெற்றது. அது வைணவருக்கு மட்டுமின்றி அனைவருக்குமே அன்றாட நிகழ்வுகளுக்கான ஒரு சிறந்த வழிகாட்டியாகும்.

வேதாந்த தேசிகரின் ஒரே மகன் வரதன்; இரண்டு வயது இருக்கையில் கடவுள் திருவமுதைப் பருகி விட்டான். சினமுற்ற தேசிகர், மகன் என்றும் பாராமல் 'இவன் சந்ததி இல்லாமல் போகக் கடவது'. என்று சாபமிட்டார். குணம் என்னும் குன்றேறி நின்ற இவர், வெகுளி கணமேயும் காத்தல் அறியாதவராகத் திகழ்ந்திருக்கின்றார்.

பொருள்பற்றின்றி வாழ்ந்த இவரைச் சோதிக்கக் கருதிய சிலர், இவருக்கு உணவிடும் வேளைகளில், பொன், வெள்ளி, நாணயங்களையும் தருவர். ஆனால், அவற்றை ஏற்று இவர் குப்பையில் போட்டு வந்தார்.

வடமொழியில் இவர் பாடிய நூல்கள் 82; தமிழில் பாடியவை 24; இப்பொழுதும் கிடைப்பவை 20. மீண்டும் திருவரங்கம் வந்து தங்கிய இவர், பகவத் தியானத்தில் தம் வாழ்நாள் மனநிறைவோடு கழித்துத் தமது 102ஆம் வயதில் (1369) உடலும் இழந்தார்.

தமிழ் வடமொழிக்குச் சமம் என இவர் தாம் நிலை நாட்டினார். ஆலயங்களில் ஆழ்வார் பாசுரங்களைச் சேவிக்கும் முறையை இவரே பாதுகாத்தார். சரணாகதித் தத்துவத்தை நிலை நாட்டினார். வைணவத்தில் இறைவனை தேடுவதில் இருநெறிகள் உள்ளன. அவை 'மர்க்கட நியாயம் - மார்ஜால நியாயம்' ஆகும். இவற்றுள் வடகலை நெறி, ஆண்டவனை நாமே சென்று பற்ற வேண்டும் (குரங்குக் குட்டி போல) எனும் மர்க்கட நெறியாகும். இதுவே வேதாந்த தேசிகர் நெறி. தென்கலை

நெறி. ஆண்டவனே வந்து உயிர்களைக் காப்பான். (பூனை தன் குட்டியைத் தூக்கிச் செல்வது போல) எனும் மார்ஜாலம் – பூனை நெறியாகும். ஸ்ரீ பாஷ்யத்தை உச்சிமீது போற்றுவது வடகலை நெறியாகும்.

இனி வேதாந்த தேசிகரின் எஞ்சியுள்ள இருபது நூல்களைப் பற்றிய விளக்கங்களை மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணரின் 'தமிழ் இலக்கிய வரலாறு' கூறுமாறு காண்போம்:

1. அமிருத ரஞ்சனி: (திருமால் திருவடி சேர்க என்னும் திருமுயற்சி. பலவகை யாப்புடைய 39 பாடல்.

2. அதிகார சங்கிரகம்: கட்டளைக் கலித்துறையும் பல்வகை மண்டிலமுமான (விருத்தங்கள்) 55 பாடல் கொண்டது. திருவடிப் பெருமை கூறுவது.

3. அமிருதா சுவாதினி: கலித்துறையும், மண்டில்முமான 27 பாடல்.

4. பரமபத சோபானம்: 21 பாடல்.

5. பர்மத பங்கம் ; 54 பாடல்.

6.அத்திகிரி மகாத்துமியம்: காஞ்சி அத்திகிரிப் பெருமாளைப் புகழும் 29 பாடல்.

7.அடைக்கலப் பத்து: 11 பாடல்.

8. அர்த்த பஞ்சகம்: உறுதிப் பொருள் ஐந்து பற்றிய 11 பாடல்.

9. வைணவ தினசரி: குற்றெழுத்து கொண்ட கவிமண்டிலம் 10.

10. திருச்சின்னமாலை: 11 பாடல்கள்.

11.பன்னிரு திருநாமம்: திருமாலின் 12 திருப்பெயரைச் சொல்லிப் போற்றும் 13 பாடல்கள்.

12. திருமந்திரச் சுருக்கு: திருமந்திரப் பொருளைச் சுருக்கிக் கூறும் 10 பாடல்.

13. துவயச் சுருக்கு: துவய மந்திரப் பொருளைச் சுருக்கிக் கூறும் 12 பாடல்கள்.

14. சரம சுலோகச் சுருக்கு: கண்ணபிரான் பாரதப் போரில் தேர் வலவனாக இருந்து அர்ச்சுனனுக்குத் தன்னிடம் அடைக்கலம் புகச் சொன்ன திருநுவற்சியைச் சுருக்கியுரைக்கும் 10 பாடல்.



15. கீதார்த்த சங்கிரகம்: பகவத் கீதைச் சுருக்கமான 21 பாடல்கள்.

16. மும்மணிக் கோவை: அகவல் வெண்பா கலித்துறை யாப்பில் திருமாலைப் புகழும் 10 பாடல்.

17. நவரத்தினமாலை: திருவகீந்திரபுர வழுத்தான 10 பாடல்.

18. ஆகார நியமம்: மாலியன் (வைணவன்) உணவு முறை பற்றிய 21 பாடல்.

19. பிரபந்த சாரம்: ஆழ்வார் பன்னிருவரின் ஊர்– பேர் – நாள் –பாடல் பற்றிய 20 பாடல்.

20. முனிவாகன போகம்: திருப்பாணாழ்வார் பாடிய 'அமலனாதி பிரான்' எனும் பனுவல் உரை.


'கவிதார்த்திக சிம்மம்' எனும் சிறப்பினைப் பெற்ற வேதாந்த தேசிகர் மிகவும் அடக்கம் உடையவர். 'யாம் எழுதிய நூல்களை உலகம் ஏற்றுக் கொண்டாலும் சரி; கோதென்று இழந்தாலும் சரி; அதுபற்றி எமக்குச் சிந்தனை இல்லை. ஏனெனில், எம் தெய்வமான ஹயக்ரீவர் எமது உள்ளத்தில் எழுதியதையே யாம் ஓலையில் இட்டோம்,' எனுங் கருத்தில் இவர் பாடிய பாடல் இவரது தன்னடக்கத் திற்குத் தனிச்சாட்சி.

"வெள்ளைப் பரிமுகர் தேசிக ராய்விர
காலடியோம்
உள்ளத் தெழுதியது ஓலையிட்டனம்
யாம் இதற்கென்
கொள்ளத் துணியினும் கோதென்
நிகழினும் கூர்மதியீர்
எள்ளத் தனையும் உகவாது இகழாது
எம் எழில் மதியே..." மேலும்,

"நானிலமும் தான்வாழ நான்மறைகள்
தாம்வாழ
மாநகரின் மாறன் மறைவாழ
–ஞானியர்கள்
சென்னியடி சேர்தூப்புல் வேதாந்த
தேசிகனே
இன்னுமொரு நூற்றாண் டிரும்...!"

என்னும் வாழ்த்துப் பாடல். இவரைப் பற்றிப் பிறர்க்கிருந்த மதிப்பையும், புலப்படுத்துகிறது. இவருடைய வாழ்நாள் நெடுகிலும் எண்ணற்ற அற்புதங்களை, இயற்கை இழந்த நிகழ்வுகளை, நிகழ்த்திக் காட்டியிருப்பதாக வரலாறு பதிவு செய்திருக்கின்றது. அறிய விழைவோர் இவரது வரலாற்றைத் தேடிப் பிடித்துப் படித்துத் தெளிவு பெறுவார்களாக...!

– கவிமாமணி டாக்டர்
வேலூர் **ம.நாராயணன்,** எம்.ஏ.,
பி.எச்.டி.,



# திருத்தொண்டர் புராணத்து சிவனடியாரின் இயல்புகள்

முன்னுரை: இறை மீது ஆழ்ந்த அன்பு வைத்தலே, பக்தி என்று சொல்லப்படுகிறது. அது இறை பக்தி ஆகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் சைவத் திருமுறைகளின் தோற்றம் பல வகையாலும் சிறப்பு வாய்ந்தது. சைவ சமயம் தழைத்தோங்க சமயக் குரவர்கள் பாடுபட்டு பக்தி நெறியை வளர்த்தனர். வாழ்வும், சமயமும் பின்னிப் பிணைந்து மக்களை ஒன்றுபடுத்தி வாழ்க்கைக்கு வழிகாட்டியாகத் திகழும் இலக்கியப் படைப்புகளாகப் பக்தி இலக்கியங்களைக் கொள்ளலாம். அந்த வகையில் திருத்தொண்டர் புராணம் காட்டும் சிவனடியார்கள் இலக்கணங்களைச் சிந்திப்பதே இக்கட்டுரை.

"பெருகாலம் தவம் பேதைமை தீரலாம் திருகவாகிய சிந்தை திருத்தலாம்' எனப்படும் பொருளைப் பாடி வாழ்த்தி வணங்கிய செயற்கரிய செயல்கள் செய்த அடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல் பெரிய புராணம்

"செயற்கரிய செய்வார் பெரியார்
சிறியர்
செயற்கரிய செய்கலாதார்"

என்ற தமிழ் மறைக்கு இணங்க அரிய செயல்கள் பல செய்தவர்கள் சிவனடியார்கள். இவர்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் இறைவன் செயல்களாகவே கருதப் பெற்றன. இறைவன் விருப்பத்திற்கு இணங்கவே அச்செயல்கள் நிகழ்கிறது என்னும் மனோபாவமே நாயன்மார்களை ஆட்கொண்டுள்ளது என்பதை அறியலாம் இதைச் சேக்கிழார்

"யாதும் ஒன்றும் என் பக்கல்
உண்டாகில்
அன்னது எம்பிரான் அடியவர்
உடைமை
ஐயம் இல்லை" என்று கூறுகிறார்.

இதையே "என் உடலும் என் உயிரும் என் பொருளும் நின்ன என இசைந்து அஞ்ஞான்றே உன்னிடை நான் கொடுத்தனன் மற்று என்னிடை வேறொன்றும் இல்லை'' என்னும் வள்ளலார் வாக்கால் அறியலாம்.



**சிவனடியார்களின் இலக்கணம்**

அடியார்களின் அகத்திலக்கணம் பத்து, புறத்திலக்கணம் பத்து என நூல்கள் கூறுகின்றன. அகத்திலக்கணம் 1.சிவனுடைய புகழைக் கேட்டவுடன் மிடறுவம் முதல், நா தழுதழுத்தல், 3.இதழ் துடித்தல், 4.உடல் குலுங்கல், 5.மயிர் சிலிர்த்தல், 6.வியர்த்தல், 7.சொல் எழும்பாமை, 8.கண்ணீர் அரும்புதல், 9.வாய்விட்டு அழுதல், 10.மெய்மறத்தல்.

புறத்திலக்கணம்: 1.திருநீரும் கண்டிகையும் அணிதல், 2.பெரியோர்களை வணங்குதல், 3.சிவனைப் புகழ்ந்து பாடுதல், 4.சிவநாமங்களை உச்சரித்தல், 5.சிவபூஜை செய்தல், 6.சிவபுண்ணியங்களைச் செய்தல் 7.சிவ புராணங்களைக் கேட்டல், 8.சிவாலய வழிபாடு செய்தல், 9.சிவனடியாரிடத்தன்றி உண்ணாமை, 10.சிவனடியார்க்கு வேண்டுவன கொடுத்தல்.

அடியார்களுடைய இயல்பை தெய்வச் சேக்கிழார்

"ஈசனுக்கே அன்பானார் யாவரையும்
தாம்கண்டால்
கூசிமிகக் குதுகுதுத்துக் கொண்டாடி
மனம் மகிழ்வுற்று
ஆசையினால் ஆவின் பின் கன்று
அணைந்தார் போல் அணைந்து.
பேசுவன பணிந்த மொழி இனியனவே
பேசுவார்"

–என்று பாடுகிறார்.

சித்தத்தைச் சிவன் பால் வைத்த சிவநெறியினர் அடியார்கள். அவர்கள் இறைவனை உள்ளத்தில் கூட்டுவித்த அன்பு மேலிட்டினால் அவனைக் கும்பிடும் பிறப்பு ஒன்றே அல்லாது வீடு பேற்றையும் விரும்பாத வன்மை வாய்ந்தவர்கள் என்பதை "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்'' என்னும் பெரிய புராணம் பாடல் உணர்த்தும்.

**சிவனடியார்களின் தொண்டு:**

தாம் மேற்கொண்ட குறிக்கோளுக்காகத் தன்னலமற்று தம் உடல், பொருள், ஆவியனைத்தையும் துறந்து தம்முடைய திருத்தொண்டினால் உயர்ந்து நிற்பவர்கள் நாயன்மார்கள். அவர்கள் புறச் சமயங்களை அகற்றி அகச் சமய வளர்ச்சிக்குத் துணைபுரிந்து அன்பு நெறியில் திருத்தொண்டு புரிந்தனர். அவர்கள் செய்த தொண்டினை இறை நெறித் தொண்டு, சமுதாயத் தொண்டு, உணவளித்தல் தொண்டு என வகைப்படுத்தலாம். இறைநெறித் தொண்டில் நல்ல நந்தவனப் பணி செய்பவர், நறுந்துணர்மலர் கொய்வோர், திருமஞ்சனப் பணி செய்வோர், அல்லும் பகலும் திரு அலகிட்டுத் திருமெழுக்கு அமைப்போர் கோயில் விளக்கு எரிப்போர், திருமுறைகளை எழுதுவோர் பாடுவோர் எனப் பல உண்டு. சமுதாயத் தொண்டிலே அடியார்களை உபசரித்தல், உணவிடுதல், நீர்தருதல், நோய் தீர்த்தல் எனத் தொண்டுகள் அடங்கும்.

அவர்களுடைய வாழ்க்கை இறைவனோடு சம்பந்தப்பட்ட ஆன்மீக வாழ்க்கையாக அமைந்திருந்தது. அவ்வாழ்க்கையில் மக்கட் பசிபோக்க உணவிடும் தொண்டு முதல் மகேசன் மனம் மகிழும் சிவத்தொண்டு வரை பல வகைத் தொண்டுகள் புரிந்தனர். பசியை

நீக்கும் அறத்தை விட உயர்ந்த அறம்யாதுள்ளது? மணிமேகலையும், "மண்டினிஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று கூறுகிறது.

**நாயன்மார்களின் இயல்பு:**

அடியார் பெருமக்களாகிய நாயன்மார்களின் இயல்பை,

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்று ஆகும் மலர்ப்பாதம் ஒரு காலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டர் ஆம் குணமிக்கார்"

என்ற பெரிய புராணப் பாடல் வாயிலாக அறியலாம்.

சித்தத்தை சிவன் பாலே வைத்தலின் அடியார்கள் வினை மாசினின்றும் விடுபட்டவர்கள் ஆவர். திருத்தொண்டர்களையும் சிவச் சின்னங்களையும் எண்ணி ஏத்தி வழிபடல் வேண்டும் என்பதை மெய்க்கண்ட சாத்திரங்களில் மணியாக விளங்கும் சிவஞானபோதத்தின் கருத்து பன்னிரண்டாம் சூத்திரமாகிய,

"செம்மலர் நோன்தாள் சேரலொட்டா
அம்மலங்கழிஇ அன்பரொடு மரிஇ
மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம்தானும் அரன்னெத்தொழுமே"

என்னும் பாடல் நமக்கு உணர்த்துகிறது.

பக்தி நெறியில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்ற நான்கு நெறிகளாகும். இந்த நால்வகை நெறிகளில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் மேலோங்கி நிற்கிறார்கள். இறைவன் வியாபகன். அவனைச் சிவன் எனச் சைவசித்தாந்தம் கூறும். இறைவனுக்கு எந்த உருவமும் இல்லாவிட்டாலும் ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று திருமேனிகள் எடுக்கிறான். இம்மூன்று திருமேனிகளையும் கடந்த நிலை சொரூபம் என்று கூறப்படும் உருவத் திருமேனி வழிபாட்டைச் சைவசித்தாந்தம் மிகவும் வலியுறுத்துகின்றது.

உருவத்தை உடலால் வணங்குவது சரியை. மந்திரங்கள் ஓதுவது கிரியை, மனத்தால் உருவத்தை தியானிப்பது யோகம், ஞானம் இரு வகைப்படும். ஒன்று அபரஞானம் அது சித்தாந்த சாத்திரங்களை ஓதுவதன் வாயிலாக உண்டாகும். மற்றொருவகை ஞானத்திற்கு பரஞானம் என்று பெயர். சரியை முதலியன மூன்றும் ஞானத்தின் வளர்ச்சி நிலைகள் எனும் உண்மையைத் தாயுமானவர் "விரும்பும் சரியை முதல் மெய் ஞானம் நான்கும் அரும்பு, மலர், காய், கனி, போல் அன்றோ பராபரமே" என்று பாடுகிறார்.


**அடியார்களின் வகை:**

அடியார்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் மார்க்கத்தில் ஈடுபட்டோர், செயற்கரிய செயல் செய்த அடியார்கள் சோறிடும் திருத்தொண்டர். அன்பின்மிகு தொண்டர்கள். பந்த பாசங்களுக்கு அப்பாற்பட்டவர். பகைவனுக்கு அருள் செய்த அடியார்கள், அகவழி பாட்டால் சிறந்த அடியவர்கள், நீதி நெற வழுவாத அடியார்கள், திருக்கோயில் தொண்டு செய்தவர், புலனின்பம் அடக்கியவர் என அடியார்களை புராணத்தில் காணலாம். பெரிய புராணம் போற்றும் நாயன்மார் அறுபத்து மூவருள் சிலர் மனைவியரோடு மனையறம் பேணி வாழ்ந்தவர்கள் ஆவர். தம் வாழ்க்கையில் எதிர்பட்ட இன்ப, துன்பங்களைப் பொருட்படுத்தாது தம் குறிக்கோளில் உறுதியோடு நின்று தமது இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்தவர்கள் அவர்கள். இப்பெருமக்கள் தவம் என்று கருதியது உடற்பழக்கத்திற்கு இயைந்த தவச் செயல்கள் அன்று.

"நீர் பலகால் மூழ்கி நிலத் தசை இத்தோலுடையாச்
சோர்தடை தாழ்ச் சுடரோம்பி – ஊரடையார்
கானகத்திக் கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வாகைத்துய்க்கும் வழி'

என்ற புறப் பொருள் வெண்பாமாலை

குறிப்பிடுவது போன்ற உடற்பழக்கத்திற்கு இயைந்த செயல்களை அவர்கள் செய்தவர்கள் அல்லர். தவம் மேற்கொண்டு ஏற்ற இடம் வீடு அன்று. காடு என்ற கருத்துடையவர்களும் அல்லர். வையத்தில் வாழ்வாங்கு வாழ இல்லற வாழ்க்கையே சிறந்தது என்ற குறிக்கோளோடு வாழ்ந்து காட்டினர்.



**பெண் அடியார்கள்:**

"மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா என்றான் பாரதி.

சேக்கிழார் காட்டும் மங்கையரில் மனைவி, தாய், மகள், சகோதரி என்ற பல்வேறு உறவு நிலைகளில் நின்று செயல்படுகின்றனர். கற்பின் வழி நின்று கடமை உணர்வோடும் கடவுட் பற்றும் உடையவராய் மனையறம் பேணி தம் கணவனின் சிவத் தொண்டுக்கு உறுதியாக நின்று பல்வேறு தியாகங்களை செய்கின்றனர்.

இம்மங்கையர்கள் செய்த செயற்கரிய செயல்களை வைத்து இவர்களை வெளியில் தெரியாத வேர்களாக விளங்கியவர் என்றும், வெளியில் தெரியும்படி புகழ் பெற்று விளங்கியவர் என்றும் இரு வகைப்படுத்தலாம். வெளியில் தெரியாத வேர்களாக விளங்கியவர்கள் திருநீலக்கண்டர் மனைவியும். திருநீலநக்கரின் மனைவியும் தம் கணவர் ஒழுக்கத்தைக் காக்கவும், உண்மையை உணரவும் தொண்டு செய்தனர்.

இயற்பகையார், கலியர் ஆகிய நாயன்மார்களின் மனைவியர், தம் கணவருடைய குறிக்கோளுக்காகத் தம்மையே தர உடன்பட்டனர். தம் கணவர் இறந்த துன்பத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் அடியாரைப் போற்றி வரவேற்று உபசரித்தனர் ஏயர்கோன் கலிக்காமர் மனைவியும், மெய்ப் பொருள் நாயனார் மனைவியும். அரவு தீண்டி இறந்த மகனை இழந்த துயரையும் மறந்து சிவனடியாரை உபசரித்து உணவருந்த உறுதியாக நின்ற அப்பூதி அடிகளின் மனைவி தாம் அறியாமல் செய்த தவறுக்காகத் தம் கணவனாலேயே தண்டிக்கப்பட்டனர். கலிக்கம்ப நாயனாரின் மனைவியும் கழற்சிங்கநாயரின் மனைவியும் தம் கணவரின் அடியார்க்கு அமுதூட்டும் பணிக்கு உதவி செய்த சிறுத் தொண்டர் மனைவியும், இளையன்குடி மாறனாரின் மனைவியும் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றத்தக்கவர்கள்.

வெளியில் தெரியும் அளவுக்குப் புகழ் பெற்ற மங்கையரின் வரிசையில் புனிதவதியார் என்று அழைக்கப்படும் காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் ஆகியோர் சிறந்து நிற்கிறார்கள்.

**முடிவுரை:**

மலப்பரிபாகத்தின் பொருட்டே இப்பிறவி நமக்குக் கிடைத்துள்ளது. "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்றார் அப்பர். பணி செய்வதே வாழ்க்கையின் குறிக்கோள் எனக் கொண்டு இறை பணியாளர்கள் மக்கள் தொண்டராக விளங்க வேண்டும் என்பதற்காகவே சேக்கிழார் வித்தகம் பேச வேண்டாம் பணி செய்ய வேண்டும்" என்றார்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதற்கேற்ப அடியார்கள் தொண்டு செய்தே பேரின்ப நிலை எய்தினர் என்பதை அவர்கள் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது.

**–ச.முத்துச்சாமி** எம்.ஏ,.பி.எட்.

# திருக்கண்ணங்குடி

பஞ்ச க்ருஷ்ணாரண்ய தலங்கள் ஐந்து ஆகும். அவை திருக்கபிஸ்தலம், திருக்கோவலூர், திருக்கண்ணபுரம், திருக்கண்ண மங்கை, திருக்கண்ணங்குடி ஆகும்.

ஒருசமயம் வசிஷ்ட முனிவர் கிருஷ்ணனைப் போன்ற ஒரு திவ்ய உருவம் வெண்ணையைக் கொண்டு உருவாக்கினார். அது உருகி விடக் கூடாதல்லவா? தன் மந்திர சக்தியின் வலிமையுடன் அந்த விக்ரஹம் இளகாமல் இருக்கும்படி கட்டி வைத்து, தினமும் பூஜை செய்து வந்தார்.

வெண்ணை விழுங்குவது என்றால் கிருஷ்ணனுக்கு கொள்ளை பிரியம். அதுவும் வசிஷ்டர் உருவாக்கியது. விடுவாரா? கோபாலன் உருவாக வந்து வசிஷ்டரின் கிருஷ்ண விக்ரகத்தை அமுது செய்து விட்டார். இதைப் பார்த்த முனிவர் கண்ணனைத் துரத்தினார். ஒரு ஊரில் மகிழ மரத்தடியில் தவம் செய்து கொண்டிருந்த மகரிஷிகள் தங்களது ஞானதிருஷ்டியினால் ஓடிவரும் கோபாலனைக் கண்டனர். உடனே தங்களது பாசக் கயிற்றினால் கட்டிப் போட்டனர். பின்னால் துரத்தியபடி வந்த வசிஷ்டரும் இதை அறிந்தார். இந்த ஊரிலேயே எழுந்தருளி இருக்கும்படி மகரிஷிகளும் வசிஷ்டரும் வேண்டிக் கொண்டனர். அவர்களுடைய பக்திக்குக் கட்டுப்பட்டு, கண்ணன் அங்கே குடி கொண்டான். அது திருக்கண்ணங்குடி ஆயிற்று. எல்லாத் தலங்களிலும் பெருமானைப் பார்த்தபடி கைகூப்பி அஞ்சலி முத்திரையுடன் இருக்கும் கருடனைத் தான் நாம் பார்க்கிறோம். இந்த தலத்தில் மட்டும் தான் வைகுண்டத்தில் கைகளைக் கட்டியபடி காட்சி தரும் கருடனைப் போன்று இரண்டு கைகளையும் கட்டியபடி இருக்கும் கருடனை நாம் தரிசிக்க முடியும்.

இந்த தலத்துடன் திருமங்கையாருக்கு ஏற்பட்ட தொடர்பு காரணமாக உறங்காப்புளி, தோலா வழக்கு, ஊறாக் கிணறு, காயா மகிழ் திருக்கண்ணங்குடி என்ற பழமொழியே ஏற்பட்டது. அது பற்றிய சுவையான கதை இதோ?

ரங்கனாதனுக்கு மதிள் கட்ட ஆசைப்பட்ட திருமங்கை ஆழ்வார் ஸ்ரீரங்கத்தை நோக்கி நடந்தார். இந்த ஊர் சமீபம் வந்தவுடன் பொழுதும் போனது. அவருக்கும் உடம்பில் அசதி. சாலை ஓரம் நாற்று நடுவதற்காக நிலம் பண்படுத்தப்பட்டிருந்தது. அந்த சேற்றில் தான் கொண்டுவந்திருந்த தங்கத்தை ஒளித்து வைத்தார். பக்கத்தில் இருந்த புளியமரத்தின் அடியில் படுத்து உறங்கு முன், "நான் தூங்கினாலும், நீ தூங்கக் கூடாது" என்று கூறிவிட்டு உறங்கினார்.

மறுநாள் காலை நிலச் சொந்தக்காரர் உழுவதற்கு வந்தார். புளியமரம் தன் இலைகளை எல்லாம் ஆழ்வார்மேலே உதிர்த்தது. திடுக்கிட்டு எழுந்த ஆழ்வார், நிலைமையைப் புரிந்து கொண்டார். தன்னை சமயத்தில் எழுப்பிய மரத்திற்கு நன்றியாக "உறங்காப்புளியே நீ வாழ்க" என்று கூறிவிட்டு உழவனிடம் தன்னுடைய நிலம் என்று பொய்வாதம் புரிந்தார். நிலைமை முற்றி பஞ்சாயத்து முன் வழக்கை எடுத்துச் சென்றனர் இருவரும். தன் பேச்சுத் திறமையினால், "தன்னுடைய பட்டா ஸ்ரீரங்கத்தில் இருப்பதாகவும், ஒரு நாள் அவகாசம் கொடுத்தால் எடுத்து வந்து காட்டுவதாகவும் பஞ்சாயத்து தலைவரை நம்ப வைத்தார். அவர்களும் சம்மதித்தனர். பட்டா அவரிடம் இருந்தால் தானே! அப்பொழுதிலிருந்து அந்த ஊரில் எந்த வழக்கும் லேசில் முடிவடைவதே கிடையதாம். தோலா வழக்கு கண்ணங்குடி என்றும் புளியமரத்தின் இலைகள் இன்றைக்கும் உறங்காதாம், அதனால் உறங்காப்புளி என்றும் பெயர் ஏற்பட்டது.

ஒரு நாள் தங்குவதற்கு அவகாசம் கேட்ட ஆழ்வாருக்கு தாகம் ஏற்பட்டது.

குடிப்பதற்கு நீரும் கிடைக்காமல் பசி மயக்கத்துடன் ஒரு மகிழ மரத்தின் அடியில் கண் அயர்ந்தார். ஒருவர் வந்து இவரை தட்டி எழுப்பி, "நீர் யார்" என்று கேட்க, "நான் ஒரு வழிப்போக்கன்," என்று ஆழ்வார் பதில் அளித்தார். "வழிப் போக்கனா? பசியுடன் இருப்பது போல தெரிகிறதே, முதலில் இதைச் சாப்பிடும் என்று அவர் உணவைக் கொடுத்தார். பசி மயக்கத்துடன் உணவைச் சாப்பிட்டார். தனக்கு உணவு தந்தது யார் என்று நிமிர்ந்து பார்க்கும்போது யாரும் தென்படவில்லை. தனது பசி மயக்கத்தை நீக்க காரணமாக இருந்த மகிழ மரத்தைப் பார்த்து "காயா மகிழ்" என்று வாழ்த்தினார். என்றும் பசுமை உடையதாக இளமையுடன் அந்த மகிழ மரம் இருக்க வேண்டும் என்று வாழ்த்தினார். அதுவே காயா மகிழ் திருக்கண்ணங்குடி ஆயிற்று. இன்றைக்கும் இங்கு மகிழ மரத்தின் விதைகளைப் போட்டால் முளைப்பதில்லையாம். இதனாலும் காயா மகிழ் என்ற பெயர் உண்டாயிற்று. கோயிலின் பின்பக்கத்தில் ஆழ்வாரின் வரலாற்றை நினைவுகூறும் அழியாச் சின்னமாக இருக்கும் மகிழ மரத்தை இத்தலத்தில் பார்க்கலாம்.

தனது பசி தீர்த்தவன் யார் என்று நினைத்தபடியே தங்கத்தை எடுத்துக் கொண்டு ஸ்ரீரங்கத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார். அவரை ஒருவன் மறித்தான். ஆழ்வார் அவனை நோக்கி, "நீ யார்," என்று கேட்டார். "நான் தலையாரி,'' என்று பதில் சொன்னான்.

அந்த நபரின் பக்கத்தில் சென்று ஆழ்வார் உற்றுப் பார்க்க, அவரிடம் சங்கும் சக்கரமும் தோன்றி மறைந்ததாம். தான் வழிப்போக்கன் என்று சொன்னதால், தனக்கு வழிப்போக்கனாவே வந்து காட்சி கொடுத்து உண்டியும் கொடுத்தது கண்ணங்குடி பெருமாள்தான் என்று நினைத்து மகிழ்ந்து தென்னரங்கத்தை வந்தடைந்து மதில் கட்டும் வேலையை ஆரம்பித்தார் திருமங்கை மன்னன்.

எத்தனையோ இன்னல்களைச் சமாளித்து அரங்கனுக்கு திருப்பணிகளைச் செய்ததுடன் ஏகாதசி பெருவிழாவிற்கும் வித்திட்ட திருமங்கை ஆழ்வார் தனது கடைசி காலத்தை திருக்குறுங்குடிக்கு சென்று சில காலம் வாழ்ந்து பின் திருநாட்டை அலங்கரித்தார். இத்தகைய தவப்பெருமை கொண்ட திருக்கண்ணங்குடி சென்று தரிசிப்பது மிகவும் அவசியமாகும்.

– இந்திரா ஆராவமுதன், ஸ்ரீரங்கம்.















*02.09.2009* அன்று கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் அருள்மிகு அரசம்பலவாணர் திருக்கோயிலில் சிலைகள் பாதுகாப்பு மையத்தினையும், அருள்மிகு கோனியம்மன் திருக்கோயிலில் அலுவலக விரிவாக்கக் கட்டடத்தை திறந்து வைத்தும், கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தும், ஏழுநிலை இராஜகோபுரத் திற்கான நிலவுக் கால் நிறுவியும், மூலவருக்கு ரூ1 கோடி மதிப்பீட்டில் தங்கப்பாவடை சாற்றியும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர், பெரியகருப்பன் அவர்கள் சிறப்பித்தார். இவ்விழாவில் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் என். பழனிசாமி அவர்கள் குத்து விளக்கு ஏற்றி வைத்து விழாவில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார். வணக்கத்திற்குரிய கோயம்புத்தூர் மாநகர மேயர் திரு ஆர். வெங்கடாசலம், ஆதினப் பெருமக்கள், இணை ஆணையர் திரு.பி.ஆர்.அசோக், அறங்காவலர்கள், முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

*02.09.2009* அன்று ஈரோடு மாவட்டம், பவள மலை, அருள்மிகு முத்துக்குமார சுவாமி திருக்கோயிலில் புதிய திருமண மண்டபம் புதிய தேர் கொட்டகை, நவீன கழிப்பறை, குளியலறை ஆகியவற்றை திறந்துவைத்தும், அலங்கார மின் விளக்குகளை ஒளிரவிட்டும், திண்டல்மலை அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயில், பச்சைமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், வேட்டைக்கார நல்லூார் அருள்மிகு வேட்டைக்கார சுவாமி திருக்கோயில் திருப்பணிகளுக்கு கால்கோள் நாட்டியும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர் பெரியகருப்பன் அவர்கள் சிறப்பித்தார். இவ்விழாவில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் இரா. சுடலைக்கண்ணன் இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.கே.கே.பி ராஜா, இணை ஆணையர் திரு.பி.ஆர்.அசோக், உபயதாரர்கள், அறங்காவலர்கள், முக்கிய பிரமுகர்கள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







**29.09.2009** அன்று நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில், திருக்கோயில்கள் திருப்பணிக்கு, திருக்கோயில் புரவலர் திட்டத்தின் கீழ் ரூபாய் ஐந்து லட்சம் நன்கொடை வழங்கிய திருக்கோயில் புரவலர்கள் டாக்டர் நல்லி என். குப்புசாமி செட்டியார், திரு. கே.துரைசாமி, திரு. வீ. பாலு, திரு. ஆர். தெய்வேந்திரன் ஆகியோருக்கு திருக்கோயில் புரவலர் விருது சான்றிதழ்களும், தங்க நிற அடையாள அட்டைகளும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந் நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத் இ.ஆ.ப. அவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





தமிழக திருக்கோயில்களில் உள்ள பாதுகாப்பு அமைப்புகள் குறித்தும், ஏற்படுத்தப்பட வேண்டிய கூடுதல் பாதுகாப்புகள் குறித்தும் கலந்தாய்வுக் கூட்டம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் **29.09.2009** அன்று நடைபெற்றது. இக்கலந்தாய்வுக்கூட்டத்தில் தமிழக காவல்துறை பொருளாதார குற்றப்பிரிவு கூடுதல் இயக்குனர் திருமதி. ஜி. திலகவதி, இ.கா.ப., அவர்கள், இந்து சமயஅறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப., அவர்கள் பொருளாதார குற்றப்பிரிவு காவல் துறை தலைவர் திரு. எஸ். ராஜேந்திரன் இ.கா.ப., அவர்கள், சிலைகள் பிரிவு காவல்துறை துணைத்தலைவர் திரு. ஆர். ஆறுமுகம் இ.கா.ப. அவர்கள் காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அறநிலையத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

திருநாகேஸ்வரம் (இராகு ஸ்தலம்)

# அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில்



அமைவிடம்: கும்ப கோணம்– காரைக்கால் வழித்தடத்தில் கும்ப கோணத் திலிருந்து 6 கி.மீ., தொலைவில் உள்ளது.

தலப்பெயர்கள்: சண்பக வனம், கிரிகன்னி கைவனம்.

இறைவன்: அருள்மிகு நாகநாதசுவாமி. நாகேஸ்வரர், செண்ப காரண் யேஸ்வரர். மகாதேவர்.

இறைவி: பிறையணி வாணுதலம்மை. கிரிகுஜாம்பாள்.

தலவிருட்சம்: சண்பகம்.

தீர்த்தம்: சூரிய தீர்த்தம்.

பாடியவர்கள்: திருஞானசம்பந்தர், திரு நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள்.


வழிபட்டோர்: சூரியன், விநாயகர், கௌதமர், இராகு, நளன், பராசர முனிவர், பாண்டவர்கள், வசிட்ட முனிவர், இந்திரன், பிரம்மன், பகீரதன், சித்திரசேனன், ஆதிசேஷன், தக்ககன், கார்க்கோடகன், சௌனக முனிவர் முதலியோர் வழிபட்டு பேறு பெற்றனர்.

இராகு பகவான் அமைப்பு: பொதுவாக இராகு கேது கிரஹங்கள் எப்படி ஏற்பட்டன என்பதை பண்டைய புராணங்கள் எடுத்தியம்புகின்றன. ஜோதிட முறையில் பார்க்கும்பொழுது இராகு பகவானின் பெருமை அளவிடற்கரியதாகும்.

பூமியானது சிறிய நீண்ட வட்ட கதியில் சூரியனைச் சுற்றி வருகிறது. தனது பாதையில் சந்திரனும் பூமியைச் சுற்றி வருகிறது. தனது பாதையில் சந்திரன் பூமியை இரு இடங்களில் சந்திக்கின்றது. சந்திரன் மேல் நோக்கிச் செல்லும்போது பூமியின் கதியில் குறுக்கிடும் இடம் இராகு எனவும் சந்திரன் கீழ் நோக்கி வரும்போது பூமியின் கதியில் குறுக்கிடும் இடம் கேது எனவும் பெயர் பெறும். எனவே இராகுவும், கேதுவும் கிரஹங்களாகும், இவை இரண்டும் பூமிக்கு மேலும் கீழும் ஒரே நேர் கோட்டில் அதாவது 180 டிகிரி வித்யாசத்தில் உள்ளதால் எதிரெதிராக அமைகின்றன.

இராகுவின் பலன்: நவக்கிரகங்களில் சனியை விட செவ்வாயும், செவ்வாயை விட புதனும், புதனை விட குருவும், குருவை விட சூரியனும், சுக்கிரனை விட சந்திரனும், சந்திரனை விட சூரியனும் இவர்கள் அனைவரையும் விட இராகுவும், கேதுவும் பலம் பொருந்தி விளங்குகின்றனர். இதனை நைசர்க்க பலம் என்று கூறுவர். சந்திர சூரியரையும் பலம் இழக்கும்படியாகவும், ஒளி குன்றும் படியாகவும், கட்டுப்படுத்தும் ஆற்றல் இராகு – கேதுவுக்கு உண்டு. இராகுவுக்கு எந்த வீடும் சொந்தமில்லை. அதாவது எந்த இராசியும் இராகுக்கு சொந்தமாக இல்லை. இராகு – கேது எந்த இராசியில் இருக்கின்றார்களோ, எந்த கிரகத்தினால் பார்க்கப்படுகின்றனரோ, எந்த இடத்தின் சேர்க்கை பெற்றுள்ளனரோ அந்த இடத்தின் பலன்களை முழுமையாகத் தருவார்கள்.

இராகு யோகத்திற்கு அதிபதி. "வீரிய பாம்பைப் பற்றி விளங்கச் சொல்வாய் யோகந்தன்னை" என்பதற்கிணங்க, யோககாரனாக இராகு திகழ்கிறார். மோட்சகாரனாக கேது விளங்குகிறார். மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, மகரம் எனும் ஐந்திடங்களில் இராகு, கேது இருந்து அவருக்கு கேந்திரங்களில் கிரகம் இருந்தால் பர்வதயோகம் எனப்படும். அதன்படி குறிப்பிட்ட ஜாதகர், சீமானாகவும், அரசனுக்கு ஒப்பாகவும் வாழ்வர். 3, 6, 11 ஆகிய இடங்களில் இராகு விளங்கினால் இராஜயோகம் கிட்டும்.



ஒருவர் ஜாதகத்தில் இராகு, கேது நல்ல இடத்தில் இருந்து விட்டால் நல்ல மனைவி, நல்ல வேலைக்காரர்கள், ஆட்சி மற்றும் செல்வாக்கு முதலியன அமையும். ஆங்கிலம், உருது போன்ற அன்னிய மொழிகளில் தேர்ச்சி பெறுவதற்கும் இராகுவே காரணமாகிறார். மருந்து, இரசாயனம், நூதன தொழில் நுட்பக் கருவிகள் போன்றவற்றிற்கும்



அவ்வப்போது மாறி வரும் நவநாகரீகத்திற்கும் இராகுவுடன் இணைந்த சுக்ரனே காரணமாகிறார். அரசியல் செல்வாக்கு, ஆட்சியுரிமை போன்ற வற்றிற்கும் இராகுவின் அனுக்ரஹம் மிகவும் தேவை.

அனுகூல இராகு, கீழான ஒருவனையும் சக்ரவர்த்தியாக்கிவிடும் என்று பூர்வபராசாரியம் என்னும் ஜோதிட நூல் கூறுகிறது.

மந்திரஜாலம், இந்திரஜாலம் கண்கூடு வித்தை போன்ற வித்தைகளும் இராகுவின் அனுக்கிரஹத்தாலேயே கிட்டும். இராகு ஒருவனை குபேர புரிக்கும் அழைத்துச் சென்று விடுவார். ஆனால், இராகு தோஷமுடையவராய் இருந்து விட்டால் மிகவும் கொடூரமான பலன்கள் விளையும். தோஷமுடைய கிரஹங்களால் கிடைக்கும் பயன்களைக் கூறும் பூர்வபராசாரியம் கீழ்வருமாறு பேசும். சூரியனை விட செவ்வாயும், செவ்வாயை விட சனியும், சனியை விட இராகுவும், மாந்தியும் (கேது) மிகவும் கொடூரமானவர்கள் என்று கூறுகிறது.

ஒருவரது ஜாதகத்தில் ஏழாமிடத்தில் இராகு இருப்பதால் திருமணம் தாமதமாகிறது. இல்லற வாழ்க்கை சிறப்பதற்கும் இராகுவின் அனுக்ரஹம் தேவை. ஐந்தாமிட இராகுவால் புத்திர தோஷம் ஏற்படுகின்றது. களத்திர தோஷம், புத்திர தோஷம் நீங்குவதற்கு இராகுவை வழிபடுதல் அவசியமாகும்.

அனைத்து வித நன்மைகளையும் அருளும் சிறந்த சிவபக்த கிரஹமாகிய இராகு சில இடங்களில் மேன்மை பெற்று விளங்கிய போதிலும், இத்திருக்கோயிலின் நிருதி மூலையில் பூரண சரீரமாக நாகவல்லி, நாககன்னி என இரு துணைவியருடன் மங்கள இராகுவாக நமக்கெல்லாம் அருள்பாலித்து வருவதை பக்தர்கள் இன்று உணர்ந்துள்ளனர். ஐந்தலை அரவு என்னும் இராகு பகவானுக்குப் பால் அபிஷேகம் செய்தால் பால் நீல நிறமாக காட்சி தருவது இவரது தனிச் சிறப்பாகும். 1986–ல் ஐந்தடி நீளம் உள்ள நாகமானது தனது சட்டையை மாலையாக இராகு பகவானுக்கு அணிவித்து இவரது பெருமையை உலகுக்கு உணர்த்தியது.

**தோஷ நிவர்த்தி:** திருமணம் தாமதமாதல், இல்லறத்தில் நிம்மதியின்மை, ஜாதகத்தில் புத்திரதோஷம், களத்திரதோஷம், காலசர்ப்ப தோஷம், சர்ப்ப தோஷம், மாங்கல்ய தோஷம் நீங்க இராகு திசை, இராகு புத்திகளில் இராகு பகவானுக்கு பாலாபிஷேகம், அர்ச்சனை, ஹோமம் செய்து பகவானை வழிபட்டுப் பேறு பெறலாம்.

**பால் அபிஷேகம் நடைபெறும் கால அட்டவணை**

**ஞாயிறு:** காலை 9.30, முற்பகல் 11.30, மாலை 4.30 முதல் 6 மணி வரை.

**திங்கள்:** காலை 7.30 முதல் 9 வரை. முற்பகல் 11.30, மாலை 5.30 மணி.

**செவ்வாய்:** காலை 9.30, முற்பகல் 11.30, மாலை 3 முதல் 4.30 வரை, மாலை 5.30 மணி.

**புதன்:** காலை 9.30, பகல் 12 முதல் 1.30 வரை, மாலை 5.30 மணி.

**வியாழன்:** காலை 9.30, முற்பகல் 11.30, பிற்பகல் 1.30மணிமுதல் 3.00 மணிவரை மாலை 5.30 மணி.

**வெள்ளி:** காலை 10.30 முதல் 12 மணி வரை, மாலை 5.30 மணி.

**சனி:** காலை 9 மணி முதல் 10.30 வரை, முற்பகல் 11.30, மாலை 5.30 மணி.

**குறிப்பு:** விழாக்காலங்களில் அபிஷேக நேரங்கள் மாறுபடும். (பாலாபிஷேகம் கட்டணம் ரூ.60/–. இராகு காலம்.

சென்ற இதழ் தொடர்ச்சி

**சா**வித்திரி, "எந்த இடத்திற்கு என் பதி கொண்டு போகப் படுகிறாரோ, தாம் எங்குப் போகிறீரோ, அந்த இடத்திற்கு நானும் செல்ல வேண்டும்; இது தான் நிலை பெற்ற தருமம்; தவத்தினாலும் குருபக்தியினாலும், பதி பக்தியினாலும் விரதத்தாலும் உம்முடைய அனுக்கிரகத்தாலும் நான் வருவது தடுக்கப்படவில்லை. தத்துவார்த்தத்தைக் கண்டறிந்த பண்டிதர்கள் நேயர்கள் நேயத்தை எழுபதங்களால், அடையத்தக்கதென்று சொல்லுகிறார்கள்; ஆகையால் நட்பை முன்னிட்டு ஒரு விஷயத்தைச் சொல்வேன்; அதனைக் கேட்பீராக.

இந்திரியங்களை ஜயிக்காதவர்கள், வனத்தில் கிருகஸ்தர் களுக்கும் வானப்பிரஸ் தர்களுக்கும் உரிய வைதிக தருமத்தையும், பிரமசாரிகளுக்கு உரிய குரு குல வாசத்தையும், சர்வசங்கபரித்யா கரூபமான சன்யாசத்தையும் அனுஷ்டிக்கிற தில்லை; ஆத்ம ஞானத்திற்காகத் தருமத்தைச் செய்ய வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லு கிறார்கள்; ஆகையால், சாதுக்கள் தருமத்தை முதன்மையாகக் கூறுகிறார்கள்; சாதுக்களுக்குச் சம்மதமான ஓர் ஆச்சிரம தருமத்தால் எல்லாரும் அந்த ஞான மார்க்கத்தை அடைகிறார்கள்; ஆகையால், சாதுக்கள் ஆத்ம ஞானத்திற்கு கிருகஸ்த வானப்ரஸ்த தருமத்தைப் பிரதானமாகச் சொல்லுகிறார்கள். நான் மேலே சொல்லப்பட்ட இரண்டாவதான நைஷ்டிக பிரமசரியத்தையும் மூன்றாவதான சந்யாசத்தையும் விரும்பவில்லை," என்றாள்.


இயமன், "புகழுள்ளவளே! நீ திரும்பு, உதாத்த முதலிய ஸ்வரங்களோடு கூடின உன்னுடைய இந்த வாக்கினால் மகிழ்ச்சியுற்றிருக்கிறேன்; இச்சமயத்தில் இவனுயிரைத் தவிர வேண்டிய வரத்தைக் கேள்; இகழப்படாதவளே! எல்லா வரங்களையும் உனக்குக் கொடுக்கிறேன்," என்றான்.

சாவித்திரி, "தருமராஜரே! என்னுடைய மாமனார் தம்முடைய இராஜ்யத்தை இழந்து, கண்களையும் இழந்து காட்டில் துன்புற்றிருக்கிறார்; அந்த அரசர் உம்முடைய திருவருளால் கண்களைப் பெற்று நல்ல பலசாலியாய் சூரியனுக்கும், அக்கினிக்கும் ஒப்பானவராக விளங்க



# சாவித்திரி

வேண்டும்," என்று வேண்டினாள். இயமன், "அம்மா! நான் உனக்கு அந்த வரத்தைக் கொடுக்கிறேன்; உன்னால் சொல்லப்பட்டது அப்படியே ஆகும்; உன்னிடத்தில் வாட்டத்தைக் காண்கிறேன். திரும்பிச் செல். உனக்குச் சிரமம் வேண்டாம்," என்றான்.



சாவித்திரி, "கணவனுடைய சமீபத்தில் எனக்குச் சிரமம் ஏது? பதியிருக்குமிடமே எனக்கு நிலையான கதி; எந்த இடத்திற்கு என் பதியைக் கொண்டு போவீரோ அந்த இடமே எனக்குக் கதி; தேவநாதரே! மீண்டும் என்னுடைய வசனத்தை நீர் அறிந்து கொள்ளும். சாதுக்களுடன் ஒரு தரம் சேர்க்கையும் சிறந்ததென்று விரும்பப் படுகின்றது; சிநேகத்தையோ அதனை விடச் சிறந்ததென்று சொல்லுகிறார்கள். மேன்மக்களுடைய நட்பானது வீணாகாது; ஆகையால், சாதுக்களுடைய கூட்டத்திலேயே வசிக்க வேண்டும்," என்றாள். இயமன், "பெண்ணே! உன்னால் சொல்லப்பட்ட வசனமானது மனதுக்கு அனுகூலமானது; புலவர்களுக்கு அறிவை வளர்ப்பது; நன்மைக்கு ஆதாரமாக இருக்கிறது; மறுபடியும் இந்த சத்தியவானுடைய உயிரைத் தவிர வேறான இரண்டாவது வரத்தைக் கேள்," என்றான்.

சாவித்திரி, "தேவ சிரேட்டரே! முற்காலத்தில் பகைவரால் கவரப்பட்டதும், தம்முடையதுமான இராஜ்ஜியத்தைச் சிறந்த அறிவுடையவரும் அரசருமான அந்த என் மாமனார் அடைய வேண்டும். என்னுடைய மாமனார் தருமத்துடன் இராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டும். இரண்டாவதான இந்த வரத்தை உம்மிடத்திலிருந்து வரிக்கிறேன்," என்றாள். இயமன் "இராஜகுமாரி! தியுமத்சேன மகாராஜன் தன்னுடைய இராஜ்யத்தை அடைவான்; தன்னுடைய தருமத்தினின்றும் தவற மாட்டான்; திரும்பிச் செல்; உனக்குச் சிரமம் வேண்டாம்," என்றான்.

இவ்வாறு கூறிய அறக்கடவுளினது வசனங்களைக் கேட்ட சாவித்திரி, "உம்மால் இந்தப் பிரஜைகள் விதிப்படி ஸம்யமனம் (அடக்குதல்) செய்யப்படுகின்றன. இந்த உயிர்களை நீர் விதியைச் செய்து கொண்டு போகிறீர். உமது இச்சையினால் கொண்டு போகிறதில்லை; தேவரே! அதனால், உமக்கு யமனாயிருக்கை பிரசித்தமாக இருக்கிறது. என்னால் சொல்லப்பட்ட இந்த வசனத்தையும் அறிந்து கொள்ளும். எல்லாப் பிராணி களிடமும் செய்கையினாலும், மனத்தினாலும், வாக்கினாலும் துரோகம் செய்யாமையும், அருளுடைமையும், கொடையும் சாதுக் களுடைய பழமையான தருமம். இந்த உலகமானது பெரும்பான்மையாக இவ்வண்ணமிருக்கிறது. மனிதர்கள் சக்தியினால் குறைந்தவர்கள்; ஸத்துக்கள் மட்டுமே தம்மை வந்தடைந்திருக்கிற பகைவர்களிடமும் கருணை புரிகிறார்கள்" என்று சொன்னாள். இயமன், "தாகங் கொண்டவனுக்குத் தண்ணீர் போல, உன்னால் இந்த வாக்கியம் உரைக்கப்பட்டது. கல்யாணி! இந்த சத்தியவானுடைய உயிரைத் தவிர வேறு விரும்புகிற வரத்தைக் கேள்," என்றான்.

சாவித்திரி, "என்னுடைய பிதாவான அச்சுவபதி மன்னர் புத்திர பாக்கியமில் லாதவர். அப்படிப்பட்ட என் பிதாவுக்குக் குலத்தை வளர்க்கத் தக்க நூறு புத்திரர்கள் உண்டாக வேண்டும். இந்த மூன்றாவது வரத்தை உம்மிடம் பெற விரும்புகிறேன்,"

என்றாள். இயமன், "பாக்கியவதி! குலத்திற்கு இடையறாத தொடர்ச்சியை உண்டு பண்ணுகிறவர்களும் நல்ல ஒளியுள்ளவர்களுமான நூறு குமாரர்கள் உன் பிதாவுக்கு உண்டாகட்டும். அரசகுமாரி! என்னால் உன் விருப்பம் நிறை வேற்றப்பட்டது. ஆதலால், திரும்புவாயாக; நெடுந்தூரம் வந்து விட்டாய்," என்றான்.

சாவித்திரி, "கணவருக்கு அருகிலிருத்தலால் எனக்கு இது தூரமன்று. என் மனமானது நெடுந்தூரம் ஓடுகிறதன்றோ? என் மனதில் தோன்றியதும் என்னால் சொல்லப்படுகிறது மான இந்த வார்த்தையை நீர் போய்க் கொண்டே கேட்பீராக. பிரதாபமுடைய நீர் விவஸ்வாயி (சூரிய)னுடைய புத்திரர்; அதனாலன்றோ கற்றறிந்தவர்கள் உம்மை வைவஸ்தர் என்று கூறுகிறார்கள்; ஈச்வரரே! பிரஜைகள் பகை, நட்பு என்னும் வேறுபாடில் லாத சமமான உமது ஆட்சியினால் வசப்பட்டு நடக்கின்றன. அதனால், உமக்கு இந்த உலகத்தில் தருமராஜர் எனப்படுதல் சித்தித்திருக்கிறது. சாதுக்களிடம் உண்டாகிறது போன்ற நம்பிக்கை தன்னிடத்திலும் உண்டாகிற தில்லை. ஆகையால், ஜனங்கள் சாதுக்களிடம் மிக்க நம்பிக்கை வைக்கிறார்கள்," என்று சொன்னாள்.

இயமன், ''பெண்மணி! கல்யாணி! உன்னால் சொல்லப்பட்டது போன்ற வசனத்தை உன்னைத் தவிர மற்றவர் களிடத்தில் நான் இதற்கு முன் கேட்டதில்லை. இதனால் நான் சந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இவனுடைய உயிரைத் தவிர வேறான நான்காவது வரத்தைக் கேட்டுக் கொள்; வரத்தைப் பெற்றுக் கொண்டு போவாயாக," என்றான்.

சாவித்திரி, "தேவசிரேட்டரே! எனக்கும் சத்தியவானுக்கும் குலத்தை உத்தாரணஞ் செய்யும் நல்ல ஆற்றலுள்ள நூறு புத்திரர்கள் உண்டாக வேண்டும்; இந்த நான்காவது வரத்தை உம்மிடத்தில் யாசிக்கிறேன்,'' என்றாள். இயமன், "பெண்ணே! பலமும் சத்தியுமுள்ளவர்களும் பிரீதை உண்டு பண்ணுகிறவர்களுமான நூறு புத்திரர்கள் உனக்கு உண்டாவார்கள்; உனக்குச் சிரமம் உண்டாக வேண்டாம்; திரும்பிப் போ; நெடுந்தூரம் வந்து விட்டாய்," என்றான்.

சாவித்திரி, "அறக்கடவுளே! என்னைப் போன்ற பதிவிரதைகளுக்கு எப்பொழுதும் பதியினிடத்திலிருந்து குழந்தைகளை உண்டு பண்ணிக் கொள்வதே சநாதன தருமம். பெரியோர்கள் வரத்தைக் கொடுத்து விட்டு ஏன் கொடுத்தோமென்று வாட்டமடைய மாட்டார்கள்; மன வருத்தத்தையும் அடைய மாட்டார்கள்; சாதுக்கள் சாதுக்களோடு சேர்க்கையானது பயனற்றதாகாது. சாதுக்கள் சாதுக்களிடத்தில் பயத்தை அடைய மாட்டார்கள்; சாதுக்கள் சத்தியத்தால் சூரியனை நடத்துகிறார்கள்; சாதுக்கள் தவத்தினால் பூமியைத் தாங்குகிறார்கள். சாதுக்களுடைய மத்தியில் சாதுக்கள் காரியம் நடைபெறாமையால் வருந்துகிறதில்லை. 'இது பெரியோர்களால் அன்போடு அடையப்பட்ட நிலைமையான ஒழுக்கம்' என்று அறிந்து சாதுக்கள் பிறருக்கு உபகாரத்தைச் செய்து அதற்குப் பிரதிபிரயோஜனத்தை எதிர்பார்க் கிறதில்லை. நல்லோர்களிடம் உண்டாகிற மகிழ்ச்சி வீணாகிறதில்லை; அர்த்தமும் அழிகிறதில்லை; கௌரவமும் அழிகிறதில்லை; இந்த மூன்றும் நல்லோர்களிடம் நிலைத் திருப்பதால் அவர்கள் காப்பவர்களா கிறார்கள்," என்று சொன்னாள்.

இயமன், "பதிவிரதையே! அறங்களோடு கூடியதும் மனத்திற்கு அனுகூலமானதுமான வசனத்தைச் சொல்லச் சொல்ல எனக்கு உன்னிடத்தில் உத்தமமான பக்தி உண்டாகிறது. நிகரில்லாத வரத்தைப் பெற்றுக் கொள்வாயாக," என்றான்.

சாவித்திரி, "தரும பூபதி! எனக்கு நூறு மக்கள் உண்டாகும் வரத்தை நீர் கொடுத்தீர்; எனது பதியை நீர் கொண்டு போனால் எனக்கு மக்கள் எவ்வாறு தோன்றுவர்? உமது வார்த்தையைக் காப்பாற்ற வேண்டுமானால் எனது நாயகன் பிழைக்க வேண்டும்; என்னுடைய நாயகனில்லையேல் நான் மரித்தவள் போன்றவளே; கணவனைத் தவிர சுகத்தையும் சுவர்க்கத்தையும் உயிரையும் நான் விரும்ப மாட்டேன்; அறக்கடவுளே! சத்தியம் உயிரினுக்கும் சிறந்ததன்றோ? நீர் புத்திர

வரத்தைக் கொடுத்தீர்; அந்தச் சத்திய வாக்கை நிறைவேற்றுமாறு என் பதியை வழங்குவீர்; உமது வசனம் சத்தியமே ஆகுக," என்றாள்.

சாவித்திரியின் பொருளடங்கிய வசனத்தை கேட்ட கூற்றுவன் மனமகிழ்ந்து, அந்தப் பாசத்தை அவிழ்த்து விட்டு, "சாவித்திரியே! உன் பதியைக் கொடுத்தேன்; நல்ல பொருளோடும் தருமத்தோடும் கூடிய நின் இனிய மொழிகளால் உள்ளம் மகிழ்கின்றேன்; உன் கணவனை அழைத்துக் கொண்டு போ; உன்னோடு நானூறு ஆண்டுகள் சுகமே வாழ்வான். யாகங்களைப் புரிந்து தேவர்களுக்கும், தருமங்களைப் புரிந்து உலகத்திற்கும் மகிழ்ச்சியைத் தந்து பொன்றாத புகழையடைவான்.

உன்னிடத்தில் நூறு குமாரர்களை உண்டாக்குவான். அந்த நூறு புத்திரர்களும் பிள்ளை பேரன்களுள்ள வர்களும், பிரசித்தியுள்ளவர்களும் சாவித்திரர்க ளென்னும் உன் பெயருள்ள வர்களுமாக நிலை பெற்றிருப்பார்கள். உன் பிதாவுக்கு உன் மாதாவான மாளவியிடத்தில் நூறு பிள்ளைகள் உண்டாவார்கள். உன்னுடைய தம்பிமார்கள் ''மாலவர்கள்'' என்னும் பெயருடன் புத்திர பௌத்திர பாக்கியங்களைப் பெற்று தேவதைகளுக்கு நிகரான திருவாளர்களாக விளங்குவார்கள்" என்று தரும வேந்தன் சாவித்திரிக்கு நல்வரங்களை நல்கி, அவளைத் திரும்பிச் செல்லுமாறு செய்து தன்னுடைய இருக்கை சென்றான்.

அறக்கடவுளிடம் விடை பெற்ற சாவித்திரி தன் கணவனுடைய உயிரில்லாத உடம்பிருக்கிற இடம் சென்றாள். தரையில் கிடந்த கணவனுடலைக் கட்டியெடுத்துத் தன் மடியில் அவன் தலையை வைத்துக் கொண்டு பூமியில் அமர்ந்தாள். சத்தியவான் உயிர்ப்புற்று நினைவையடைந்து, தேசாந்திரம் போய்த் திரும்பி வந்தவன் போல் சாவித்திரியை அடிக்கடி நிமிர்ந்து பார்த்து, "நெடு நேரம் தூங்கி விட்டேன். என்ன காரணத்தால் என்னை நீ எழுப்பவில்லை? என்னை இழுத்த கறுத்த புருஷன் எங்கே?" என்று வினவினான். சாவித்திரி, "அரசு குமாரரே! நீர் நெடுநேரம் என் மடியில் தூங்கினீர்.

உயிர்களை அடக்கும் அந்த யமபகவான் போய் விட்டார். களைப்பாறி விட்டீர்; கூடுமானால் எழுந்திரும்; இருளடர்ந்த இரவு வந்திருப்பதைப் பாரும்," என்றாள்.

சத்தியவான் சுகமாகத் தூங்கி எழுந்தவனைப் போல் எழுந்திருந்து எல்லாத் திசைகளையும் வனங்களையும் பார்த்து, "நல்ல இடையுள்ளவளே! பழங்களை வேண்டி புறப்பட்டு வந்தேன்; கட்டையைப் பிளந்து தலைவலியுற்று நிற்க முடியாமல் உன் மடியில் உறங்கினேன்; பிறகு கோரமான இருட்டையும் ஒளியுள்ள ஒரு புருடனையும் பார்த்தேன்; அது என்ன? சாவித்திரி! கனவா? உண்மை தானா? உனக்குத் தெரிந்தால் சொல்," என்று வினவினான்.

சாவித்திரி, ''விரத சீலரே! இரவு அதிகப்பட்டு வருகிறது; எல்லாவற்றையும் நடந்தபடி உமக்கு நாளைக்குச் சொல்வேன்; எழுந்திரும்; உமக்கு மங்களம்; தாய், தந்தையர்களைப் பார்ப்போம்; நடுநிசியாய் விட்டது; இதோ அசுரர்கள் களிப்புடன் பயங்கரமாகப் பேசிக் கொண்டு உலாவு கிறார்கள்; மிருகங்களுடைய கால்களால் மிதிக்கப்படுகின்ற சருகுகளின் சத்தங்களும் கேட்கிறது; இதோ நரிகள் என்னுடைய மனத்தை நடுங்கச் செய்து தென்மேற்குத் திசையை அடைந்து கோரமாக ஊளையிடுகின்றன; வாரும்'' என்றாள். சத்தியவான், "இருள்மூடி வனம் பயங்கரமாக இருக்கிறது; உனக்கு வழியுந் தெரியாது; நடக்க வலியற்றிருக்கிறாய்" என்றான்.

சாவித்திரி, ''காதல' இவ்விடத்திலிருக்க உமக்கு விருப்பமில்லையானால் அதோ ஒரு மரம் எரிந்து கொண்டிருக்கிறது. அங்கிருந்து நெருப்பைக் கொணர்ந்து நாற்புறமும் இந்த விறகுகளால் மூட்டி எரியச் செய்வேன்; வருந்தாதீர்; உம்மை நோயுள்ளவராகக் காண்கிறேன்; நாளை காலை ஆச்சிரமம் செல்லுவோம்; உமக்கு விருப்பமிருந்தால் இந்த இரவை இவ்விடத்தில் கழிப்போம்," என்றாள்.

(தொடரும்)

# பூவரசன் குப்பம்

# அருள்மிகு இலட்சுமி நரசிம்மர்



**த**மிழகத்தில் உள்ள ஸ்ரீ இலட்சுமி நரசிம்மர் திருக்கோயில்களில் பூவரசன்குப்பம் ஸ்ரீ இலட்சுமி நரசிம்மர் திருத்தலம் சற்று வித்தியாசமான திருத்தலம்.

நரசிங்கப் பெருமாள் பின்புற இரு கைகளில் சங்கு சக்கரதாரியாய் தன் மடி மீது திருமகளான இலட்சுமியை (அமிர்தவல்லித் தாயார்) இடக்கையால் அணைத்துக் கொண்டும், வலக்கையால் பக்தர்களுக்கு அருளாசி வழங்குகிறார். தாயார் ஒரு கண்ணால் நரசிம்மரையும், ஒரு கண்ணால் பக்தர்களையும் காணும் இதுபோன்ற திருக்காட்சி வேறெங்கும் காண இயலாத அற்புதக் காட்சியாகும்.

**திருக்கோயில் அமைப்பு:**

கிழக்கு திசையை நோக்கிய இத்திருக்கோயிலில் கிழக்கு திசையை நோக்கிய கருவறையில் புன்னகை பூத்த முகத்துடன் கூடிய இலட்சுமி நரசிம்மர் எழுந்தருளியுள்ளார்.



சந்நிதியின் எதிர் புறம் கருடாழ்வார் சந்நிதி (இலட்சுமி நரசிம்மரை வணங்கிய நிலையிலும்) தென்புறம் நோக்கி பக்த ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. இடப்புறம் ஆண்டாள் சந்நிதியும், வலப்புறம் அமிர்தவல்லித் தாயார் சந்நிதியும் அமைந்துள்ளது. வடகிழக்கு மூலையில் முற்றிலும் கருங்கற்களால் ஆன உறைக் கிணறு உள்ளது. 3 அடி விட்டமும் 25 அடி ஆழம் வரை அமைந்த இக்கிணறு திருவயிந்திபுரம் தேவநாத சுவாமி கோயிலில் அமைந்துள்ள சேஷ தீர்த்தத்திற்கு நிகரானதாக கருதப்படுகிறது.

மண்டபத்தின் புடைப்புச் சிற்பங்களில் ஒரு பீடத்தின் மீது திருநாமம் இன்றி வில் அம்புடன் சங்கு சக்கரம் இருப்பது புதுமையான செய்தியாகும்.

**தல வரலாறு:**

விஜய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இப்பகுதியை ஆண்ட சிற்றரசன் ஒருவன் (பூவரசன் என இம்மன்னனைக்

கூறுவர்) அடிக்கடி போரில் ஈடுபட்டு தோல்வியுற்றான். அவனது அரசும், பலவீனப்பட்டதாம். நிதி நெருக்கடியால் அவதியுற்றான். மழையின்றி விளை நிலங்கள் காய்ந்து வறண்டன. பசி, பஞ்சம் தலைவிரித்தாடியது. முகமதியர் ஆட்சியின் போது கவனிப்பாரற்று புதர் மண்டிக் கிடந்த பூவரசன்குப்பத்து லட்சுமி நரசிம்மர் கோயிலில் 48 நாட்கள் விரதம் இருக்கத் தொடங்கினான் சிற்றரசன். தன் துன்பங்கள் விலகி நாடும், நகரமும் சுபிட்சம் அடைய வேண்டுமென்று நரசிம்மரை மனமுருகி வேண்டினான். விரதம் நிறைவு பெற்ற அன்று உறங்கிக் கொண்டிருந்த சிற்றரசனின் கனவில், "அரசனே உம் கவலைகள் தீரும். நீ இழந்த அனைத்தும் திரும்பப் பெறுவாய். நாடும், நகரமும் நலம் பெற்று விளங்கும். நீ விரதமிருந்து வேண்டிய இக்கோயிலைப் புதுப்பித்து பொலிவுறச் செய்வாயாக," என பெருமாள் உணர்த்தினார்.

அன்று முதல் நல்ல மழை பெய்தது. ஆறு, ஏரி, குளங்களில் நீர் நிரம்பின. சிறிது காலத்திற்குள் அரசன் இழந்த அனைத்தையும் திரும்பப் பெற்றான். கோயிலையும், புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்து பெருமாளின் பேரருளைப் பெற்றான். இக்கோயிலிலிருந்து மறைந்து விட்ட செப்பேடுகள், ஓலைச் சுவடிகளால் அறியப் பெற்ற இச்செய்தியை செவி வழிச் செய்தியாகவும் கூறுவர்.

**சப்த ரிஷிகளின் தவம்:** தட்சிண பினாகினி என்று போற்றி வணங்கப்பட்ட புனித நதியான தென்பெண்ணை யாற்றின் வடகரையின் சப்த ரிஷிகளான அத்திரி, வசிஷ்டர், ஜமதக்னி, பரத்வாசர், கௌதமர், காசிபர், கௌசிகர் எனும் ஏழு முனிவர்களும் கடுந்தவம் புரிந்தனர். முனிவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி திருமால் ஸ்ரீ இலட்சுமி நரசிம்மராய் காட்சியளித்தார். இத்திருமேனி கொண்டு இங்கே எழுந்தருளி இவ்வுலக மாந்தர்களுக்கும் திருவருள் புரிய வேண்டுமென வேண்டிக் கொண்டனர். திருமாலும், மகிழ்ந்து அவ்வண்ணமே இருந்தருள் புரிவதாக இசைந்தார் என புராண வரலாறும் உண்டு.

**கல்வெட்டு:** கி.பி.16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று சிதைந்த நிலையில் உள்ளது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் இக்கல்வெட்டு தொடக்கமும் முடிவும் இன்றி 33 வரிகள் கொண்டதாக உள்ளது. இக்கல்வெட்டில் தன்னுடைய வீரத்தைப் பற்றியும், தான் வென்ற நாடுகளின் பட்டியல்களையும் தந்துள்ளான்.

கி.பி.1178 – 1218 வரை அரசாண்ட குலோத்துங்கனின் 8வது ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட இக்கல்வெட்டு தானம் (நிலக் கொடை) பற்றியச் செய்தியைக் கூறுகிறது.

**திருவிழாக்கள் – உற்சவங்கள்:** தமிழ் வருடப் பிறப்பு, ஆடிப்பூரம், ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, தீபாவளி, கார்த்திகை தீபம், ஸ்ரீ அனுமன் ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, பொங்கல் பண்டிகை, மாசி மகம் போன்ற உற்சவங்கள் நடைபெறுகின்றன.

**சுவாதி நட்சத்திரம்:** பிரதி மாதம் சுவாதி நட்சத்திரம் அன்று காலை 9.00 மணிக்கு சுதர்சன ஹோமமும், தன்வந்திரி ஹோமமும் நடைபெறுகின்றன.

**குடமுழுக்கு:** 08.09.2005 ஆம் ஆண்டு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா ஸ்ம்ப்ரோக்ஷண (கும்பாபிஷேகம்) நடைபெற்றது.

**ஆகமம்:** பாஞ்சராத்ர ஆகம விதிமுறைப் படி இத்தலத்தில் பூஜைகள் நடைபெறுகிறது.

**அமைவிடம்:** விழுப்புரத்தில் இருந்து தென்கிழக்கில் 20 கி.மீ., தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது.

பண்ருட்டி – விழுப்புரம் பேருந்து சாலையில் கள்ளிப்பட்டியில் இருந்து கிழக்கே 4 கி.மீ., தொலைவிலும் புதுச்சேரி – விழுப்புரம், விழுப்புரம் – கடலூர் சாலையின் மடுகரை வழி சிறுவந்தாடு என்னும் ஊரிலிருந்து 2 கி.மீ., தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

**நடைதிறப்பு:** காலை 8.00 மணி முதல் பகல் 12.30 மணி வரை. மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை. உடற்பிணி, தோஷங்கள் அனைத்தையும் விலக்கி பேரருள் புரியும் சக்திமிக்க திருத்தலமாக விளங்குகின்ற பூவரசன்குப்பம் ஸ்ரீ இலட்சுமி நரசிம்மரை தரிசித்து பேரருள் பெறுவோம்.

புதுப்பேட்டை **வ.கோவிந்தன்** எம்.ஏ.,

# உலகம் உய்ய உதித்த உடையவர்

சென்ற இதழ் தொடர்ச்சி

**ரா**மானுஜர் அந்தணர் அல்லாத உறங்காவில்லியின் கைகளைப் பிடித்துக் கொண்டு திருமடத்தில் இருந்து வெளியே சென்று வருவதைப் பார்த்த அந்தண வைஷ்ணவர்கள் பொறாமை கொண்டு உறங்காவில்லியை அவமதிக்கத் தொடங்கினர். இதை அறிந்த ராமானுஜர் அந்த அந்தண வைஷ்ணவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க எண்ணினார். தன்னுடைய அந்தரங்க சீடர் ஒருவரை அழைத்து அந்த வைஷ்ணவ பிராமணர்களின் வஸ்திரங்களில் ஒரு பகுதியை கிழித்து எறிந்து விட்டு யாரும் அறியாமல் திரும்பி வந்துவிடு என்று சொல்லவும் அந்த சீடரும் அவ்வாறே செய்தார். விழித்து எழுந்த பிராமணர்கள் தங்கள் வஸ்திரங்கள் கிழிக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஒருவருக்கொருவர் சண்டையிட்டனர்.

அன்று இரவு உறங்காவில்லிதாஸர் எம்பெருமானுடன் இருந்து தொண்டு செய்து வரும் பொழுது ராமானுஜர் தன் சீடர்களை அழைத்து உறங்காவில்லிதாசரின் மனைவி பொன்னாச்சியினுடைய நகையை எடுத்து வரும்படி கூறினார். ராமானுஜரின் சீடர்களும் உறங்காவில்லிதாசரின் வீட்டுக்குச் சென்றனர். பொன்னாச்சி அம்மாள் இடக்கையை தலைக்கு தலையணையாக வைத்து ஒருபுறமாக படுத்திருந்தார்.



ராமானுஜரின் சீடர்கள் பொன்னாச்சியின் வலது கையின் அணிகலன்களை எல்லாம் கழற்றினார்கள். வைஷ்ணவர்கள் இதைச் செய்கிறார்கள் என்று உணர்ந்த பொன்னாச்சி அம்மாள் நகைகளை கழற்றி செல்லட்டும் என்று மனதில் எண்ணிக் கொண்டு உறங்குவது போல் பாவனை செய்தார். வலது கை, வலது செவி, வலது கால் நகைகளை சீடர்கள் எடுத்துக் கொண்டனர்.

பின்னர் இடது கை, இடது செவி, இடது கால் நகைகளை கழற்றிக் கொள்ள வசதியாக புரண்டு படுத்தார். வந்த சீடர்களோ அவர் விழித்துக் கொண்டார் என்று எண்ணி பயந்து ஓடி விட்டனர். பின்னர் ராமானுஜரிடம் வந்து அந்த நகைகளை கொடுத்தனர். ராமானுஜர் உறங்காவில்லி தாசரை அழைத்து அவருக்கு விடை கொடுத்து வீட்டுக்கு அனுப்பினார். அவர் சென்ற பிறகு தன் சீடர்களை அழைத்து உறங்காவில்லிதாசர் அறியாமல் அவரைப் பின் தொடர்ந்து சென்று நடப்பதை அறிந்து வாருங்கள் என்று சொன்னார்.

சீடர்களும் அவ்வாறே சென்றனர். வீட்டில் நுழைந்து உறங்காவில்லிதாசர் பொன்னாச்சி அம்மையாரின் இடப்பக்க நகைகள் மட்டுமே இருப்பதைக் கண்டு என்ன காரணம் என்று கேட்டார். பொன்னாச்சி அம்மையாரும் 'ஸ்ரீவைஸ்ணவர்கள் சிலர் களவாட வந்தனர். வலப்பக்க நகைகளை எடுத்துக் கொண்ட பிற்பாடு இடப்பக்க நகைகளும் எடுத்துக் கொள்வதற்கு வசதியாக புரண்டு படுத்தேன். ஆனால், அவர்களோ நான் விழித்து விட்டேன் என்று அச்சமுற்று வெளியே சென்று விட்டனர்," என்று கூறினார்.

இதைக் கேட்ட உறங்காவில்லிதாசர், "நீ கொடுப்பதாக நினைத்து புரண்டு படுத்திருக்கிறாய். ஆபரணங்களை அடுக்கி வைத்த செப்புபோல் அல்லவா நீ இருந்திருக்க வேண்டும் என்று சொல்லி வைஷ்ணவர்கள் ஏற்று கொண்டுள்ள ஆபரணங்களே பயனுள்ளவை என்று கூறி எம்பெருமானாரை தியானித்து உறங்கச் சென்றார். இவை அனைத்தையும் கண்காணித்த சீடர்கள் நடந்தவற்றை எல்லாம் ராமானுஜரிடம் வந்து தெரிவித்தனர். உடனே ராமானுஜர் வஸ்திரங்கள் கிழிக்கப்பட்ட அந்தணர்களை அழைத்து "வஸ்திரத்தின் ஒரு பகுதியை கிழிக்கப்பட்டதற்கு ஒருவருக்கு ஒருவர் கோபப்பட்டு திட்டிக் கொண்டீர்களே, உறங்காவில்லியும், பொன்னாச்சியும் நகைகளை இழந்ததற்கு சிறிதும் வருத்தப்படவில்லையே, "அவர்களின் நெஞ்சம் பரிசுத்தமானது. அவர்களுடைய ஞானம் ஒப்பற்றது," என்று கூறி குணங்களே மங்களத்தை அளிப்பவை. ஜாதிகள் மங்களத்தை அளிக்காது என்று உபதேசிக்கவும், அந்த அந்தணர்கள் தவறினை உணர்ந்து திருந்தினர். எம்பெருமானார் பொன்னாச்சி அம்மாளின் அந்த நகைகளை அவருக்கே திருப்பி அளித்தார். இவ்வாறு பரிசுத்தமாக வாழ்ந்த உறங்காவில்லிதாசர் எம்பெருமானிடம் "பெருமாள் விபீஷணனை ஏற்றுக் கொண்டார். அடியேனை தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்கவும், ராமானுஜரும் அபயம் கொடுத்தார். உறங்காவில்லிதாசர் திருநாட்டுக்கு எழுந்தருளின அன்றே அவருடைய மனைவி பொன்னாச்சியும் திருநாட்டுக்கு ஏகினார் என்றும் அவர்கள் இருவரையும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒன்றாகவே திருப்பள்ளிப்படுத்தினார்கள் என்பதும் ஆசார்ய வைபவ மஞ்சரி நமக்குத் தரும் செய்தியாகும்.

எம்பெருமானாருக்கு உறங்காவில்லி தாசரைப் போல் வரதாசார்யர், யஜ்ஞேசர் என்று இரு சிஷ்யர்கள் அஷ்டஸஹஸ்ரம் என்ற கிராமத்தில் இருந்தனர். இதில் வரதாசார்யர் மிகவும் ஏழ்மையில் இருந்தவர். யஜ்ஞேசரோ மிகுந்த செல்வந்தர். ஒருநாள் எம்பெருமானார் ஏழ்மையில் இருக்கும் வரதாசாரியாரை துன்பப்படுத்த வேண்டாம் என எண்ணி தன் சீடர்களை யஜ்ஞேசரிடம் அனுப்பி தான் வந்திருப்பதை தெரிவிக்கச் சொன்னார்.

யஜ்ஞேசரிடம் சீடர்கள் சென்று எம்பெருமானாரின் வருகையை

தெரிவித்ததும் அவர் மகிழ்ச்சி அடைந்து எம்பெருமானாரை வரவேற்க தயார் ஆனார். ஆனால், சீடர்களுக்கு தீர்த்தம் கூட கொடுக்கவில்லை. இதை அறிந்த ராமானுஜர் யஜ்ஞேசர் வீட்டிற்கு செல்லாமல் வரதாசார்யர் வீட்டிற்குச் சென்றார். அப்பொழுது அவர் வீட்டில் இல்லை. அவர் வீட்டில் இல்லாததை உணர்ந்த எம்பெருமானார் வரதாசார்யர் எங்கு உள்ளார் என்ற கேள்வியை வீட்டின் வெளியே இருந்தே கேட்டார். வரதாசார்யரின் மனைவி ஆகிய பருத்திக்கொல்லை அம்மையார் ஏழ்மையில் கிழிந்த ஆடையில் இருந்ததினால் வெளியே வர முடியாமல் வெட்கப்பட்டு, வேதனைப்பட்டு எம்பெருமானாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்க முடியவில்லையே என்று மனம் வருந்தி கையை கொட்டி ஒலி எழுப்பினார். நிலைமையை உணர்ந்த எம்பெருமானார் தன் தலையில் அணிந்திருந்த வஸ்திரத்தை உடனே வீட்டிற்குள் வேகமாக வீசினார். அந்த மங்கையார் அந்த ஆடையை அணிந்து கொண்டு வெளியே வந்து எம்பெருமானையும், சீடர்களையும் வணங்கினார். அவர்களுக்கு அன்னதானம் செய்ய விரும்பினார். ஆனால், வீட்டில் பொருள் ஏதும் இல்லை.

எனவே, தகாத காரியம் செய்தாவது எம்பெருமானையும், சீடர்களையும் உபசரிப்பேன் என்று உறுதி பூண்டாள். அந்த ஊரில் பருத்திக்கொல்லை அம்மாள் மீது ஆசை வைத்த ஒருவன் அவனுடைய ஆசையை வெளிப்படுத்திய போதெல்லாம் அம்மாதரசி அவனுக்கு இணங்காமல் தக்க அறிவுரை சொல்லி அனுப்பிவிடுவாள். இப்பொழுது எம்பெருமானாருக்கும், சீடர்களுக்கும் உணவு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவன் வீட்டிற்கு சென்று நிலைமையை எடுத்துச் சொல்லி எம்பெருமானாருக்கும், சீடர்களுக்கும் உணவு அளித்த பிற்பாடு என் உடலை உனக்குத் தருவேன் என்று சொல்லி பணம் பெற்று எம்பெருமானாருக்கும் சீடர்களுக்கும் உணவு அளித்தார். வரதாசார்யாரும் அவருடைய மனைவி பருத்திக்கொல்லை அம்மையாரும் அமுது படைக்கும்போது கீழ்க்கண்டவாறு மனதில் எண்ணிக் கொண்டனர்.

1.இந்த ஸ்ரீவைஷ்ணவர்களின் பெருமைக்குத் தக்கபடி தங்களால் அமுது படைக்க முடியவில்லையே என்னும் குறை அவர்கள் மனத்தில் இருந்தது.

2. எனினும் தாங்கள் அமுது படைப்பதாகவே அவர்கள் எண்ணவில்லை. ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்கள் குடிலில் அமுதுண்ணும் பாக்யம் தங்களுக்கு எம்பொருமான் அருளால் கிடைத்ததை எண்ணி உகந்தனர். அப்பேர்ப்பட்ட பாக்யம் தங்களுக்கு அடிக்கடி கிடைக்க வேண்டுமே என ஏங்கினார்கள்.

3. அந்த வைஷ்ணவர்கள் தங்கள் குடிலில் அமுதுண்ணும் பாக்யத்தை எம்பெருமான் அளித்ததனால் இயற்கையாக வரக்கூடிய சாத்வீகமான இறுமாப்பும் கொண்டனர். மற்றவர்களுக்குக் கிடைக்காத பாக்யம் தங்களுக்குக் கிடைத்தமைக்கு மகிழ்ந்தனர்.

4. அமுது படைக்கும்போது அபசாரம் ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்றும் பயந்தனர்.

5. இத்தனை நாள் இந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அமுது படைக்கும் பாக்யம் தங்களுக்குக் கிடைக்காமல் இருந்ததை எண்ணி சோகமும் அடைந்தனர்.

6. இந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அமுது படைத்ததால் பிறவி எடுத்த பயனைத் தாங்கள் பெற்றதாகவே மகிழ்ந்தனர்.

ஸ்ரீவைஷ்ணவர்கள், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அமுது செய்யப் பண்ணும்போது இருக்கக் கூடிய இத்தகைய இயல்பை, வார்த்தைமாலை 289ஆம் வார்த்தை அருளும்.

''ஒரு ஸ்ரீவைஷ்ணவரை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் அமுது செய்யப்

---

**பெ.ராமநாதபிள்ளை செயல் அலுவலர், திருமூர்த்திமலை உடுமலை வட்டம்.**

பண்ணும்போது, இழவும் (குறைப்பாடு) இரப்பும், இறுமாப்பும், துணுக்கமும், சோகமும், வாழ்வும் உண்டாக வேண்டும் என்று ஆச்சான்பிள்ளை அருளிச் செய்தருளியிருக்கிறார்."

எம்பெருமானுக்கு அமுது அளிக்க தான் செய்யத் துணிந்த காரியத்தை நினைத்து வரதாசாரியார் தன் மனைவி மீது மதிப்பும், மரியாதையும் அதிகம் கொண்டார். தான் உறுதி அளித்தபடியே பருத்திக்கொல்லை அம்மாள் எம்பெருமானின் பிரசாதத்தையும், ஸ்ரீபாத தீர்த்தத்தையும், எடுத்துக் கொண்டு, அந்த இளையன் வீட்டிற்கு சென்றார். எம்பெருமானாரின் பிரசாதமும், தீர்த்தமும் சாப்பிட்ட உடனே அவன் புத்தி தெளிந்தான். சகல பாவமும் தொலைய தன்னை உணர்ந்தான். பருத்திக்கொல்லை அம்மாளின் காலில் விழுந்து தாயே என்று கதறி அழுதான். தன்னையும் எம்பெருமானிடம் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினான். அதன் பின்னர் அந்த இளைஞன் எம்பெருமானை சரணடைந்து சகல ஆசைகளையும் துறந்து பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றான். நரகத்தில் விழ வேண்டிய அவனையும் ஆட்கொண்டார் எம்பெருமானார்.


அஷ்ட ஸஹஸ்ர கிராமத்தில் வரதாச்சார் வீட்டில் எதிராஜர் தங்கியிருக்கிறார் என்பதை அறிந்து யஜ்ஞேசரனார் மிகவும் மனம் வருந்தி வரதாச்சார் வீட்டிற்கு வந்து எம்பெருமானாரின் காலில் விழுந்து அழத் தொடங்கினார். எம்பெருமானார் அவரை வாரி எடுத்து நல்ல வார்த்தைகளை அருளினார். "இழிகுலத்தவர்களாயினும் எம்மடியார்களாகில் தொழுமின், கொடுமின், கொண்மின் என தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்துள்ளார். ஆனால், நீரோ எம்முடைய சீடர்கள் உன் வீட்டிற்கு வந்தபொழுது அருந்த தண்ணீர் கூட கொடுக்கவில்லை. என்னை வணங்குவதில் உனக்கு என்ன பயன் என்று கேட்டார். உனக்கு வைஷ்ணவர்களிடம் பக்தி இல்லை, ஆடம்பரத்திற்காகவே தர்மம் செய்தீர் என்றார்.

யஜ்ஞேசர் தன் தவறை உணர்ந்து மன்னிக்கும்படி வேண்டினார் எம்பெருமானார் அவரை மன்னித்து உம்முடைய எல்லா செல்வங்களும் வைஷ்ணவ அடியார்களுக்கே பயன்படட்டும் என்று கூறவும் அவ்வாறே நான் நடப்பேன் என்று உறுதி கூறி எம்பெருமானாரை சரணடைந்தார்.

– தொடரும்


திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2. முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3. பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4. உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5. உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

**தி**ருவாரூரும், அதனைச் சூழ்ந்துள்ள பிற ஆறுதலங்களும், சப்தவிடங்கத் தலங்கள் என்று வழங்கி வருகின்றன. சிறந்த இந்த ஏழு விடங்கத் தலங்களும், நமது தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில், திருவாரூரைச்சுற்றிச் சூழ்ந்து மிக மிக அருகில் அமைந்து விளங்கு கின்றன. இந்தத் தலங்கள் ஏழிலும் எழுந் தருளியிருக்கும் இறைவருக்குத் தியாகராசர் என்பதே பொதுப் பெயராயினும், தனித்தனியே சிறப்புப் பெயர்கள் உண்டு.

**1. தலத்தின் பெயர்**
திருவாரூர்
**தியாகராசர் பெயர்**
வீதிவிடங்கர்
**நடனத்தின் பெயர்**
அசபா நடனம், (பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள திருமால், தம் இருதயத்தில் தியாகராசரை வைத்து அன்புடன் பூசித்துத் தியானித்துக் கொண்டு, அசபா என்ற மந்திரத்தை மெல்லென ஓதிக் கொண்டு, தம்முடைய உசுவாசம், நிசுவாசம் என்னும் மூச்சுக்காற்றினால், தியாகராசப் பெருமானின் திருஊசலை ஆட்டுவித்து வழிபடுவது போன்று அமைந்த ஒருவகை நடனம்)

**2. தலத்தின் பெயர்:**
திருநள்ளாறு
**தியாகராசர் பெயர்**
நகவிடங்கர்
**நடனத்தின் பெயர்**
உன்மத்த நடனம்(பித்துக் கொண்டவன் ஆவேசமுற்று ஆடுவது போன்றது. உன்மத்தன் –பைத்தியக்காரன்)

**3. தலத்தின் பெயர்**
திருநாகைக்காரோணம்(நாகப்பட்டினம்
**தியாகராசர் பெயர்**
சுந்தரவிடங்கர்
**நடனத்தின் பெயர்**
பாராவார தரங்க நடனம்(கடலின் அலை போல் மேலே உயர எழுந்தும் கீழே தாழவிழுந்தும் ஆடுவது பாராவாரம் –கடல். தரங்கம்– அலை.)

**4. தலத்தின் பெயர்**
(திருக்காரவாசல்)
**தியாகராசர் பெயர்**
ஆதிவிடங்கர்
**நடனத்தின் பெயர்**
குக்குட நடனம் (கோழி போன்று வளைந்து சுற்றி ஆடுவது. குக்குடம் – கோழி)

**5. தலத்தின் பெயர்**
திருக்கோளிலி
(திருக்குவளை)



# சப்த விடங்கத் தலங்களும், நடனங்களும்


**தியாகராசர் பெயர்**
அவனிவிடங்கர்
**நடனத்தின் பெயர்**
பிருங்க நடனம் (வண்டு மலருக்குள் சென்று படிந்து குடைவது போல ஆடுவது. பிருங்கம் – வண்டு)

**6. தலத்தின் பெயர்**
திருவாய்மூர்
**தியாகராசர் பெயர்**
நீலவிடங்கர்
**நடனத்தின் பெயர்**
கமல நடனம்(தாமரை மலர் மொட்டாக இருந்து சிறிது சிறிதாக விரிந்து வட்டமாக மலர்வது போல ஆடுவது. கமலம் – தாமரை)

**7. தலத்தின் பெயர்**
திருமறைக்காடு
(வேதாரண்யம்
**தியாகராசர் பெயர்**
புவனிவிடங்கர்
**நடனத்தின் பெயர்**
அம்சபாத நடனம்(அன்னம் நடப்பது போல மிக அழகாகவும் நளினமாகவும் ஆடுவது அம்சம் – அன்னம். பாதம் –கால்)

சைவ சமயத்தில், தில்லை நடராசர் நடனக்கலைக்குரிய அதிதெய்வம். அதேபோலத் திருவாரூர்த் தியாகராசரும் ஒருவகையில் நடனத்துக்குரிய அதி தெய்வமாவார். ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போலச் சிவபரம்பொருள் ஒன்றே, தில்லை நடராசராகவும், திருவாரூர் தியாகராசராகவும் விளங்குகிறது. நடராசர் நின்று ஆடும் அழகர்; தியாகராசர் இருந்து ஆடும் அழகர், என்று பெரியோர்கள் கூறுவர். தமிழக நடனக் கலையின் சிறப்பும், அருங்கலையார்வமும், சிறந்துயர்ந்த தெய்வீக நெறியுணர்வும், இணைந்து, தமிழக மக்களின் கலை நாகரிகப் பண்பாட்டு வாழ்வியல் வளப்ப மாட்சிமை நலங்கள் அனைத்தும், இந்தச் சப்தவிடங்க நடனங்களின் மூலம், தெற்றேன விளங்குதல் அறிந்துணர்ந்து, போற்றி அனுபவித்து, ஆனந்தம் அடையத்தக்கதாகும். அவ்வத் தலங்களில் முறையே நிகழும் இந்த நடன வகைகள், நேரிற் கண்டு மகிழத்தக்கவை; நடனக் கலையின் பலவகை நுட்பத் திறங்களை விளக்குபவை.

நடனக் கலையில் இயல் இசை என்னும் இரண்டும்கூட இணைந்து இயைந்து ஒன்றி விளங்குகின்றன. ஆதலின், தில்லை நடராசரையும், திருவாரூர்த் தியாகராசரையும், நடனக் கலைக்கு மட்டுமேயன்றி, இயல் இசை நாடகம் என்னும் நம் முத்தமிழ்க்குமே, உரிய அற்புதத் தெய்வங்கள் என்று, நாம் சிறப்புறக் குறிப்பிட்டு மகிழலாம்.





# திருமணத் தடை நீக்கும் திருவேதிகுடி

திருமண வரம் தரும் தலம் என்றதும், நம் அனைவரின் நினைவுக்கு வருவது தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள திருமணஞ்சேரி திருத்தலமாகும். இதற்கு இணையான ஆனால், அதிகம் அறியப்படாத தலமாக விளங்குவது தஞ்சை மாவட்டம் தஞ்சை வட்டத்தில் அமைந்துள்ள திருவேதிகுடி திருத்தலமாகும். இந்த இரு தலங்களுமே சம அளவில் தேவாரப் பாடல்களைப் பெற்றவை என்பதும், இவ்விரு தலங்களையும் வழிபட்டவர்கள் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஆவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இனி திருவேதிகுடி தலப் பெருமையை அறிவோம்.

**பெயர்க் காரணம்:**

வேதங்கள் யாவும் இத்தலத்து இறைவனை வழிபட்டு வணங்கியதால், இத்தலத்திற்கு வேதிகுடி எனப் பெயர் வந்தது. இதனால் இறைவன் வேதபுரீசுவரர் என அழைக்கப்படுகிறார். இதேபோல, வேதி என்பது பிரம்மனைக் குறிக்கும் சொல்லாகும். இது பிரம்மன் வழிபட்ட தலமாகவும் விளங்குவதால், வேதிகுடி என்று பெயர் வந்ததாகவும் கூறுவர்.

**வேதபுரீஸ்வரர்:**

கிழக்கு நோக்கிய வகையில் எளிய உருவில் இறைவன் கம்பீரமாகக் காட்சி தருகின்றார். வேதங்கள் வழிபட்டதால், இறைவனுக்கு வேதபுரீஸ்வரர் என்ற பெயர் வழங்கப்படுகிறது. வேதம் கேட்பதில் விருப்பமுள்ள விநாயகர், கருவறைக்கு வெளியே செவி சாய்த்துக் கேட்கும் கோலத்தில் வேத விநாயகராகக் காட்சி தருகிறார்.


பங்குனி மாதம் **13, 14, 15** ஆகிய மூன்று நாட்களில் சூரியன் தன் ஒளிக் கதிர்களால் அதிகாலை வேளையில் இறைவன் மீது ஒளிவீசி வழிபடுவது இந்த ஆலயத்தின் மற்றொரு தனிச் சிறப்பாகும்.

இறைவன் வாழை மடுவில் தோன்றியதால், வாழை மடுநாதர் என்றும் அழைக்கப் படுகிறார்.

**மங்கையர்க்கரசி:**

ஆலயத்திற்கு





வெளியே இடப் புறத்தில் அன்னைக்குத் தெற்கு நோக்கிய தனிச் சன்னதி அமைந்துள்ளது. அதனருகே வசந்த மண்டபமும் அமைந்துள்ளது. தெற்கு நோக்கிய அன்னை நின்ற கோலத்தில் பெரிய வடிவில் அழகுக்கே அழகாக அற்புதக் கோலத்தில் அன்னையின் காட்சி நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது. அன்னையே நம்மிடம் பேசுவது போன்ற ஒரு பிரமிப்பை ஏற்படுத்துகின்றது. இந்த அன்னையே மங்கையர்க்கரசி என்ற பெயருடன் அழைக்கப்படுகின்றார். இவளே திருமண தடை நீக்கும் அன்னையாவாள்.

இத்தலத்து இறைவனையும் அன்னையையும் நேரில் வந்து முறையாக வழிபட்டு மனமுருக வேண்டிக் கொண்டு, திருஞான சம்பந்தரின் திருவேதிகுடி பதிகத்தை முழு நம்பிக்கையோடு ஒரு மண்டலம் காலை, மாலை என இரு வேளைகளிலும் தங்கள் இல்லங்களில் படிப்பவருக்கு மண்டலத்தை நிறைவு செய்யும் வேளையில் திருமணத் தடை நிச்சயம் நீங்கும். திருமணம் கைகூடும் என்பதற்கு இப்பகுதிவாழ் அடியார்கள் சாட்சியாகத் திகழ்கின்றனர். இதனைச் சம்பந்தர் தன் பதிகத்தில் உறுதியாகக் கூறுகின்றார்.


உன்னிஇரு போதும்அடி பேணும்
அடியார் தம் இடர் ஒல்கஅருளித்
துன்னி ஒரு நால்வருடன் ஆல்நிழலில்
இருந்த துணைவன் தன் இடம் ஆம்
கன்னியரொடு ஆடவர்கள் மாமணம்
விரும்பி, அரு மங்கலம் மிக
மின் இயலும் நுண்இடை நல்மங்கையர்
இயற்று பதி வேதிகுடியே.

தடை நீங்கித் திருமணம் முடிந்ததும் தம்பதியராக இத்தலத்துக்கு மீண்டும் வந்து இறைவனுக்கு நன்றி கூறி தங்களால் இயன்ற காணிக்கையைச் செலுத்தினால் போதும்.

இத்தலத்தை "திண்ணன் வினைகளைத் தீர்க்கும் பிரான் திருவேதிகுடி நண்ணவரிய அமுதினை நாமடைந்தாடு துமே,'' என்று திருநாவுக்கரசர் புகழ்ந்துரைக்கிறார்.

**வேத விநாயகர்:**

வேதம் கேட்பதில் விருப்பமுடையவரான விநாயகர், வேதிகுடி வேதபுரீசுவரின் வேதத்தினைக் கேட்பதில் மிகுந்த விருப்பம் உள்ளவராக இருந்தார். இதனால் இறைவன் கூறும் வேதத்தினைக் கேட்க கருவறையின் வெளியே தன் செவி சாய்த்து வேதம் கேட்கும் கோலத்தில் இருப்பது வேறெங்கும் காண முடியாத ஆபூர்வக் காட்சியாகும். இடது காலை உயர்த்தி, தலையை வலப்புறமாகச் சாய்ந்து, இடது காதை உயர்த்திய நிலையில் அமைந்துள்ள விநாயகரின் வித்தியாசமான கோலம் கண்டு ரசிக்கத்தக்கது. இதனாலேயே இந்த விநாயகருக்கு





வேத விநாயகர் என்றும், செவி சாய்த்த விநாயகர் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. இந்த விநாயகரை இறைவன் கருவறையின் வெளியே வலதுபுறத்தில் காணலாம்.



**ஆலய அமைப்பு:**

இவ்வாலயம் மிகவும் எளிமையாக கிழக்கு நோக்கிய சிறிய இராஜகோபுரத்துடன் எதிரே நந்தி மண்டபம், அதையடுத்து திருக்குளம், கோபுரத்தின் இடப்புறம் அம்மன் சன்னதி, வசந்த மண்டபம் என அமைந்துள்ளது.

பழங்காலத்தில் இவ்வாலயம், தற்போது காணப்படும் முதற்பிரகாரத்தில் இறைவன் சன்னதியும், இரண்டாவது பிரகாரத்தில் அம்மன் சன்னதி மற்றும் நந்தி மண்டபமும் அமைந்திருக்கக் கூடும். கால மாற்றத்தால் இரண்டாவது பிரகாரம் மறைந்து அம்மன் சன்னதியும் நந்தி மண்டபமும் ஆலயத்திற்கு வெளியே அமைந்திருக்கலாம்.

இராஜகோபுரத்தினுள் நுழைந்ததும், மகா மண்டபம், உள்மண்டபம், அர்த்த மண்டபம், இதையடுத்து இறைவன் கருவறை ஆகியவை காட்சி தருகின்றது. இறைவன் கருவறையைச் சுற்றி தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் அமைந்துள்ளன. முருகன், மகாலட்சுமி, நடராஜர், சப்த லிங்கங்கள், 108 சிவலிங்கங்கள் தனித்தனியே அமைந்துள்ளது.

**தலச் சிறப்பு:**

வேதிகுடியை வேதங்கள் வழிபட்டது போலவே, சூரியன், பிரம்மன், குபேரன், சைதன்ய முனிவர் என பலரும் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். இத்தலம் திருமணத் தடை நீக்கும் தலமாகவும், நவக்கிரக தோஷங்கள் நீக்கும் தலமாகவும் திகழ்கின்றது. திருவையாற்றைச் சுற்றிலும் அமைந்துள்ள சப்த தலங்களின் வரிசையில் திருவேதிகுடி நான்காவது தலமாகத் திகழ்கின்றது. அதேபோல, திருவையாறில் சித்ரா பௌர்ணமி அன்று வரும் விசாக நட்சத்திர நாளில் சப்தஸ்தான திருவிழா எனப்படும் ஏழூர் திருவிழா வெகு சிறப்பாக நடைபெறும். இதில் ஏழு ஊர்களிலிருந்து ஒன்று சேரும் இறைவன் திருவுருவங்களை ஒரே இடத்தில் கண்டு மகிழலாம். அதில் திருவேதிகுடி வேதபுரீசுவரரும் காட்சி தருவார்.

**தலம் – தீர்த்தம்**

இத்தலத்தின் தீர்த்தம் வேத தீர்த்தமாகும். இது ஆலயத்தின் எதிரே அமைந்துள்ளது. தலமரம் வில்லமாகும்.





முன்பாக கண்டியூர் என்ற தலம் வரும். கண்டியூரிலிருந்து கிழக்கே 3 கிலோ மீட்டர் தூரத்தில் திருவேதிகுடி அமைந்துள்ளது.

தற்போது நல்ல சாலை வசதியும் உள்ளது. குறிப்பிட்ட நேரத்தில் மினி பஸ் வசதியும் உண்டு. கண்டியூரிலிருந்தும் திருவையாறில் இருந்தும் ஆட்டோ மூலமும் சென்று வரலாம்.

**கல்வெட்டுகள்:**

இவ்வாலயத்தில் கி.பி.1895ஆம் ஆண்டின் தொல்லியல் ஆய்வறிக்கையின் மூலம் நான்கு கல்வெட்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளின் மூலம் முதலாம் ஆதித்ய சோழன் (கி.பி.890) இவ்வாலயத்திற்கு செய்த திருப்பணிகளைப் பற்றி அறிய முடிகிறது.

நிலக்கொடை, விளக்கெரிக்க தானம் என இவ்வாலயத்திற்கு வழங்கப்பட்ட தானங்களை அறிய முடிகிறது. அத்துடன் இவ்வாலயம் 1100 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டது என்பதும் தெரிய வருகிறது.

**தரிசன நேரம்:**

காலை 9.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையிலும் மாலை 5.30 மணி முதல் 7.30 மணி வரையில் திருக்கோயிலில் தரிசனம் செய்யலாம்.

திருமண தோஷம், கிரக தோஷம் உள்ளவர்களுக்கும், வேதம் கற்க விரும்புவோருக்கும் ஏற்ற தலமாக திருவேதிகுடி அமைந்துள்ளது.

**ஆலய அமைவிடம்:**

தஞ்சை மாவட்டம், தஞ்சாவூர் வட்டத்தில் திருவேதிகுடி அமைந்துள்ளது. தஞ்சை – திருவையாறு வழித்தடத்தில் திருவையாறுக்கு

**படங்கள், கட்டுரை –**
**பனையபுரம் அதியமான்.**


| | |
|---|---|
| சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் | ப.ரா. சம்பத் இ.ஆ.ப., ஆணையர் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13 |
| ஆசிரியர்(கூ.பொ) | ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர் |
| அச்சிடுவோர் | சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை–86 தொலைபேசி: 23450920/28117575 |


குறைந்த செலவில் நீண்ட ஆயுள் உத்திரவாதத்துடன்
கோயில் கலசங்கள், விமானம், கவசங்கள், கொடிமரம்,பிரபை,
பத்தரை மாத்து தங்கத்தில் பளப்பளக்க செய்வோம்
Thejus
24-Ct Gold Platings
94,g n chetty road,t.nagar, chennai 600 017. ph.2815 6370. 94440 00060 email: divyasid@gmail.com www.thejus.com

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11



# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை திருவள்ளூர் மாவட்டம்


தலைமை அலுவலகம் 27885247 மலைக்கோயில் 27885243
சரவணப் பொய்கை 27885225 தணிகை இல்லக் குடில் 27885387 கார்த்திகேயன் இல்லக் குடில் 27885396


## கந்த சஷ்டி, இலட்ச்சார்ச்சனை மற்றும் புஷ்பாஞ்சலி திருவிழா அழைப்பிதழ்

பேரன்புடையீர்!

தெய்வ மணங்கமழும் தமிழ்த் திருநாட்டில், தமிழ் கடவுளாம் முருகப் பெருமான் எழுந்தருள் புரியும் ஆறுபடை வீடுகளுள் ஐந்தாவது படைவீடாய்த் திகழும் "குன்று" தோராடல் எனப் போற்றப்படும் திருத்தணிகைத் திருத்தலத்தில் நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2040 (ஐப்பசி மாதம் 18.10.2009 முதல் (ஐப்பசி 6) 24.10.2009 முடிய உள்ள நாட்களில் கந்த சஷ்டி திருவிழாவும், இலட்ச்சார்ச்சனையும், புஷ்பாஞ்சலியும், அதனைத் தொடர்ந்து திருக்கல்யாண உற்சவமும் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| முதல் நாள் திருவிழா | 18.10.2009 | மூலவருக்கு புஷ்ப அலங்காரம் |
| இரண்டாம் நாள் திருவிழா | 19.10.2009 | மூலவருக்கு பட்டு அலங்காரம் |
| மூன்றாம் நாள் திருவிழா | 20.10.2009 | மூலவருக்கு சந்தனக் காப்பு அலங்காரம் |
| நான்காம் நாள் திருவிழா | 21.10.2009 | மூலவருக்கு திரு ஆபரண அலங்காரம் |
| ஐந்தாம் நாள் திருவிழா | 22.10.2009 | மூலவருக்கு தங்க கவச அலங்காரம் |
| ஆறாம் நாள் திருவிழா | 23.10.2009 | மூலவருக்கு தங்க கவச அலங்காரம் |

மேற்படி ஆறு நாட்களிலும் அருள்மிகு சண்முகருக்கு காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இலட்சார்ச்சனை தொடர்ந்து நடைபெறும். 23.10.09 ஆறாம் நாள் திருவிழா அன்று மாலை 5 மணிக்கு அருள்மிகு சண்முகருக்கு புஷ்பாஞ்சலியும் மறுநாள் 24.10.09 அன்று காலை 11.00 மணியளவில் உற்சவருக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

கந்தர் சஷ்டி நடைபெறும் நாட்களில் பக்தி இன்னிசையும், சமய சொற்பொழிவுகளும், பரத நாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது.

இலட்சார்ச்சனை செய்ய நபர் ஒருவருக்கு காணிக்கையாக ரூ.100/- செலுத்தி கந்தர் சஷ்டி நாட்களில் அருள்மிகு சண்முகருக்கு இலட்சார்ச்சனை செய்து திருத்தணிகை முருகனின் திருவருள் பெருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இங்ஙனம்

அ.தி.பரஞ்ஜோதி., எம்.காம்.பி.எல்.,
இணை ஆணையர்/ செயல் அலுவலர்
(கூடுதல் பொறுப்பு)

மு.ஈஸ்வரப்பன்
அறங்காவலர் குழுத் தலைவர்,


அறங்காவலர்கள்
க.பாலகிருஷ்ணன். ஏ.வெ.சக்கரப்பன்., கா.உஷாரவி., மு.நாகன்.